# விடுதலைப்புலிகள்

குரல்: 62 | 1 - 15 பங்குனி 1996 | அன்பளிப்பு: ரூபா 5/-

## உள்ளே→


- ✲ யாழ்ப்பாணப் படையெடுப்பு
- ✲ இந்தியாவும் ஈழத் தமிழர்களும்
- ✲ நிலைகுலையும் பொருளாதாரம்
- ✲ தீர்வுத் திட்டம்
- ✲ கிழக்கு: புதிய பேருபாயம்
- ✲ கதிர்காமர்: துரோகத்தின் பரிசு
- ✲ படைபலமே முழுப்பலம் கவியுரை


**சிங்கள முப்படைகளும் தயாராகிவிட்டன!**

# மீண்டும் பாரிய படையெடுப்புக்கு

# வடக்கில் மும்முர ஏற்பாடுகள்!

**வட பகுதி மீது இன்னுமொரு மிகப் பெருமெடுப்பிலான படையெடுப்புக்கு சந்திரிகா அரசு தனது படைகளைத் தயார்ப்படுத்தி விட்டது.**

**அதே சமயத்தில் – சர்வதேச சமூகத்தை ஏமாற்றி விடுவதற்காக, உப்புச்சப்பற்ற தீர்வுப்பொதி ஒன்றை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் விவாதத்திற்குச் சமர்ப்பித்துள்ளது.**

யாழ்ப்பாணம் மீது வரலாறு காணாத ஒரு பாரிய படையெடுப்பை நிகழ்த்தி, அங்கு சிறீலங்காவின் தேசியக் கொடியை நாட்டி விட்ட போதும் -

வலிகாமத்தின் ஒட்டுமொத்தமான சனத்தொகையினரும் முற்றுமுழுதாக வெளியேறி - அரசியல் ரீதியில் அந்தப் படையெடுப்பிற்குப் படுதோல்வியையே பரிசளித்தனர்.

இந்நிலையில் - வடக்கின் மீது - அநேகமாக குடாநாட்டின் ஏனைய பகுதியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, மக்களைச் சிறைப்பிடிக்கும் நோக்கம் கொண்ட இன்னொரு படையெடுப்பை விரைவிலேயே நிகழ்த்த, சிங்கள முப்படைகளும் தயார்ப் படுத்தப்பட்டு விட்டன.

வலிகாமச் சமரின் பின் புதிதாகப் பத்தாயிரம் பேரைப் படைக்குத் திரட்டி, பயிற்சி வழங்கலைத் துரிதமாக நிறைவேற்றிய சிறிலங்காவின் படைத்துறை அமைச்சு, அவர்களை வட, கிழக்குப் பகுதிச் சமர் முனைகளுக்குப் பகிர்ந்து அனுப்பி விட்டு -

அங்கெல்லாம் நிலைகொண்டிருந்த, போர் அனுபவம் பெற்ற கணிசமான தொகைப் படையினரை வடக்கிற்கு நகர்த்தி, ஏற்கனவே அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் படைப் பிரிவுகளோடு இணைத்துள்ளது.

யாழ்ப்பாணப் படையெடுப்பின் போது புலிகளின் 60 வீதமான பலம் அழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறுகின்ற ஜெனரல் அனுருத்த ரத்வத்த, சித்திரைப் புதுவருடத்திற்கு முன்னர் புலிகளின் எஞ்சிய பலமும் அழிக்கப்பட்டுவிடும் எனப் பகிரங்கமாகவே அறிவிப்பதிலிருந்து-

வடக்கின் மீதான உத்தேசப் படையெடுப்பின் போர் அரங்கு, மிக விரைவிலேயே திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

'சூரியப் பிரகாச'த்தின் முடிவிலேயே, யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் தமது அரசியல் எதிர்காலம் பற்றிய தீர்க்கமான முடிவை உலகிற்கும், சிங்கள தேசத்திற்கும் மிகத்தெளிவாகவே பிரகடனப் படுத்தி விட்ட பின்பும் கூட -

அத்தகைய நிலைப்பாட்டை அடிப்படையாக வைத்து, தமிழர்களின் பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை அங்கீகரித்து, தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் வழிமுறைகளிலான ஒரு தீர்வைக் காண விருப்பப்படாத சந்திரிகா அரசு -

மக்களைப் பலவந்தமாகச் சிறைப் பிடித்து, இராணுவ ஆட்சிக்குள் வாழவைப்பதற்கான இன்னொரு படையெடுப்பிற்குத் தயாராகி விட்டது. இத்தன்மை, இராணுவத் தீர்வையே வரித்துக் கொண்ட சந்திரிகா அரசின் உண்மைத் தோற்றத்தையே புலப்படுத்துகின்றது.

இதே சமயத்தில் - தான் அரசியல் தீர்வையே கொள்கையாகக் கொண்டவர்போலக் காட்டி, சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசைதிருப்பி, உலக நாடுகளை ஏமாற்றிவிடும் ராஜதந்திர நோக்கத்துடன் -

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் என்ற பெயரில், உப்புச்சப்பற்ற அரைகுறைத் தீர்வுத் திட்டமொன்றை, சந்திரிகா அரசியற் களத்தில் அறிமுகப் படுத்திவிட்டிருக்கின்றார்.


மறுவளமாக - யாழ் நகரில் சிங்கக் கொடி ஏற்றியும், அதனைப் பண்டைய மன்னராட்சிக்கால முறைப்படி பேழையில் வைத்து அறிவிக்கும் வெற்றி நிகழ்வை நடாத்தியும், ''சமாதானத்தைப் போர் மூலம் காணும்'' கொள்கையைப் பிரகடனப்படுத்தியும் பேரினவாதப் பூதத்தைத் தட்டி எழுப்பவிட்டுள்ள சந்திரிகா அரசு -

தான் தயாரித்துள்ள அரைகுறையான தீர்வுத் திட்டத்திற்கே பெரும் எதிர்ப்பை முடுக்கிவிட்டுள்ளது.

சாராம்சத்தில் -

தமிழர்களாகிய நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டியது என்னவெனில், சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கம் ஒருபோதுமே எமக்கு நியாயமான தீர்வொன்றைத் தரப்போவதில்லை என்பதையும் -

சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பை முறியடிக்கக்கூடியதாக எம் பலத்தைப் பெருக்கிக்கொள்ளாத வரை, ஒருபோதுமே நாம் விமோசனத்தைப் பெறமுடியாது என்பதனையுமாகும். ○



*யாழ்ப்பாணத்தின் மடியில் வரலாறு காணாத மிகப்பெரும் படையெடுப்பை நடாத்தி, அந்த மண்ணின் ஐநூறாயிரம் குழந்தைகளின் வாழ்வை வேரோடு பிடுங்கி விரட்டியடித்துவிட்ட சிங்களம், அகங்காரம் கொண்ட வெற்றித் திமிரோடு அந்த முற்றத்தில் சிங்கக்கொடியை நாட்டிய ஓரிரு மணிநேரத்திற்குள் – பட்டப் பகற்பொழுதிலேயே –*

*மட்டக்களப்பில், புதுக்குடியிருப்பிலிருந்த சிங்களச் சிறப்பு அதிரடிப்படையின் முகாமிற்குள் புலிகள் புயலைப் புகுத்தினர்!.*

*24 புலிவீரர்கள் களப்பலியாகிய அந்தப் பெருந்தாக்குதலின் வெற்றியை உறுதிப்படுத்திய கரும்புலித்தாக்குதலை* **மேஜர் ரங்கன்** *நடாத்தினான்.*

*5 அதிகாரிகள் உட்பட 42 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டு, பெருமளவு ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்ட போதும், தனால் முறியடிக்கப்பட்ட இத்தாக்குதலில் ஒரு படைவீரரே கொல்லப்பட்டதாக சிங்களப்படை அறிவித்தது.*

**தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு**

## புலிகளின் குரல்

# இந்தியாவும் ஈழத் தமிழர்களும்

வரலாற்றுக் காலம் தொடக்கம் இந்தியாவின் நேசசக்தியாக ஈழத் தமிழினம் இருந்துவந்துள்ளது. மொழிரீதியாகவும் – பண்பாட்டுரீதியாகவும் – அரசியல் ரீதியாகவும் நீண்டதொரு வரலாற்று உறவு, இருபகுதி மக்களிடையேயும் நிலவிவருகின்றது. இந்தியா சந்தித்த வெற்றிகளின்போதும், தோல்விகளின்போதும் இந்திய மக்கள் அனுபவித்த அதே மன உணர்வுகளையே, ஈழம்வாழ் தமிழர்களும் வெளிப்படுத்தினர். இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்குச் சவாலாக எழுந்த இந்திய-சீனப் போரின்போதும்,இந்திய – பாகிஸ்தான் யுத்தங்களின்போதும், ஈழத் தமிழர்கள், இந்தியாவின் பக்கமே நின்று குரல் கொடுத்தனர்.

ஆனால், இதற்கு மாறான உணர்வலைகளையே சிங்கள தேசம் காலங்காலமாக வெளிப்படுத்தி வந்துள்ளது. வெளியிலிருந்து இந்தியா நெருக்கடிகளைச் சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தியாவின் பகைவர்களுக்கே சிங்கள அரசுகள் ஆதரவு வழங்கிவந்தன. இந்தியாவின் தேசிய நலனுக்கு விரோதமாகச் செயற்படுவதே சிறீலங்காவின் வெளிவிவகாரக்கொள்கையாகவும் இருந்தது. அந்தளவுக்கு பாரதநாட்டைத் தனது பகை நாடாகவே சிறீலங்காவின் அரசியல் வரலாறு சித்திரிக்கின்றது. ஆனால், இந்த உண்மைவரலாற்றைப் புறந்தள்ளிவிட்டு – நண்பனைப் பகைவனாகவும், விரோதியைத் தோழனாகவும் பார்க்கும் மாபெரும் வரலாற்றுத் தவறை இந்திய அரசு இழைக்கின்றது. இந்தவகையில் தனது நட்புசக்தியான ஈழத் தமிழர்களை அழிக்க, தனது பகைமைச் சக்தியான சிங்கள அரசிற்குப் பலவகைகளிலும் துணைபோகும் இந்திய அரசின் ஈனச் செயலை, ஈழத் தமிழர்களால் ஜீரணிக்க முடியாதுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் – அன்றிலிருந்து இன்றுவரை - ஈழத் தமிழரின் நலன்களுக்கு எதிராகவே இந்தியா செயற்பட்டுவருகின்றது. தமிழீழ மக்களின் தனி அரசுப் போராட்டம் தொடர்பாக இந்தியாவுக்கு இருக்கும் சில அச்சங்களே, அது எடுக்கும் இந்த எதிர் நிலைப்பாட்டிற்குக், காரணமாகும்.

இலங்கையின் இனப்போரைச் சாட்டாகவைத்து தனது தென்பகுதி வாசலில்- பாரதநாட்டின் பகைமைச் சக்திகளான அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாட்டு சக்திகள் தங்களது ஆதிக்கத்தைப் பலப்படுத்திவிடும் என்று இந்திய அரசு பயந்தது; தனது சொந்தப் பாதுகாப்பிற்கே அது ஆபத்தை விளைவித்துவிடும் என்றும் இந்திய அரசு அஞ்சியது. எனினும், இந்த அச்சங்கள் பனிப்போர் முடிவுடன் தோன்றிய புதிய உலக ஒழுங்கின் பிரகாரம் நீடித்து- நிலைக்க எந்தவித காரணமும் இல்லை.இலங்கைத்தீவில்,அந்த சக்திகளின் கைஓங்கினால் அது தனது பிராந்திய நலனுக்குப் பங்கம் விளைவிக்கும் என்று இந்தியா கருதியதோ, அந்த சக்திகளே இன்று இந்தியாவின் நட்புநாடுகளாகவும் - வர்த்தகப் பங்காளிகளாகவும் மாறிவிட்டன. எனவே, ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக இந்திய அரசிற்கு இருந்ததொரு பழைய அச்சம், இன்று காலாவதியாகிவிட்டது.

இதேவேளை, ஈழத்தில் தமிழர்கள் தனி அரசு ஒன்றை அமைப்பது தனது தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தை விளைவித்துவிடும் என்ற ஒரு அச்சமும் இந்தியாவிற்கு உள்ளது. தமிழீழத் தனி நாட்டின் உதயம்,திராவிடக் கிளர்ச்சியைக் கிளறி தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டிலும் பிரிவினைப் புயலைப் பிறப்பித்துவிடும் என்று, இந்தியா அஞ்சுகின்றது. உண்மையில் இது, அபத்தமான கருத்தின் அடிப்படையில் எழுந்ததொரு மிகைப்படுதப்பட்ட அச்சமேயாகும்.

இன அழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்காக ஈழத் தமிழர் நடாத்தும் தற்காப்புப் போராட்டம், இன அழிப்பு என்ற யதார்த்தத்தை எதிர்கொள்ளாத தமிழ்நாடு மாநிலத்தின் மக்களையும் போராடத் தூண்டும் என்ற இந்திய அரசின் பயம், அநாவசியமானதாகும் எனினும், இந்தத் தேவையற்ற அச்சத்தின் அடிப்படையிலேயே, ஈழத்தமிழருக்குப் பாதகமான தீர்மானங்களை இதுவரைநாளும் இந்திய அரசு எடுத்து வருகின்றது.

இலங்கைத்தீவில் – சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் - தமிழ் இனம் இனப் படுகொலைக்கு உட்படுத்தப்படுகின்றது. என்பது, இந்திய அரசும் அறிந்த உண்மை இந்த இன அழிப்பிலிருந்து தற்காத்துக்கொள்வதற்காக ஈழத் தமிழர் நடாத்தும் விடுதலைப் போராட்டத்தைத் தனது தேசிய நலனுக்கு எதிரான செயலாக இந்தியா சித்தரிக்க முயல்வது, ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

சிங்களப் பேரினவாதத்தின் தமிழ் இன அழிப்புக் கொள்கைக்கு இந்தியாவின் இந்த நிலைப்பாடு உற்சாகம் ஊட்டுவதாகவே உள்ளது.

என்றுமில்லாத அளவுக்கு – இப்போது – தமிழ் இன அழிப்பை இலக்காகக் கொண்ட யுத்தத்தை சிங்கள அரசு தீவிரப்படுத்தி உள்ளது. யாழ்ப்பாணத்தின் ஐந்து இலட்சம் மக்கள் தமது வாழ்விடங்களை இழந்து, அகதிகளாகி அல்லற்படுகின்றனர். வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் யுத்த நெருக்கடியும் இன அழிப்பு அபாயமும் தீவிரமடைந்து வருகின்றன. தென்னிலங்கை வாழ் தமிழர்கள் – குறிப்பாக கொழும்பு வாழ் தமிழர்கள் - சந்திரிகா அரசின் இனவாதக் கொள்கைகளாலும், அணுகுமுறைகளாலும் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால், ஒருபுறம் இனக்கொலை அபாயத்தையும் – மறுபுறம் வேண்டப்படாத மக்களாகக் கணிக்கப்பட்டு துன்புறுத்தப்படும் அவலத்தையும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்கின்றனர். இத்தகைய இக்கட்டான வரலாற்றுச் சூழலிலேயே சிங்கள அரசிற்கு இந்திய அரசும் உதவி வருகின்றது.

தமிழரின் பாதுகாப்புக் கவசமான புலிகள் இயக்கத்தின் பலத்தைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபடும் அதேவேளை, சிங்களப் படைகளின் பற்களையும் – நகங்களையும் கூர்தீட்டிவிடும் வகையில் அதற்கு இராணுவ உதவிகளையும வழங்குகின்றது.

இது, தமிழினப் படுகொலையை மேலும் அபாயகரமான கட்டத்திற்கு நகர்த்தவே உதவப்போகின்றது. அத்துடன் சிங்களப் பேரினவாத அரசுடன் இணைந்து இந்திய அரசும், ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்கின்றது என்ற வரலாற்று அவப்பெயரையும், இந்தியா சம்பாதிக்கப்போகின்றது.

ஈழத் தமிழரின் அழிவு சிங்களப் பேரினவாதத்திற்கு பெருவெற்றியாக அமையும். ஆனால் அது, இந்திய மக்களுக்கு எந்த ஒரு நன்மையையும் பெற்றுககொடுக்க மாட்டாது. அதுபோல இந்தப் போரில் சிங்கள அரசு பெறும் வெற்றி, இந்தியாவின் நலனுக்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை எனவே, இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக, இந்தியா புதிய அணுகுமுறைகளைப் பிரயோகிக்கவேண்டும்.

இந்திய மக்களின் உண்மையான நட்புச்சக்தி ஈழத் தமிழர்கள்தான். ஆகவே, ஈழத் தமிழினத்தின் நலனைப் பேணும் வகையில் இந்திய அரசு தனது வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும். மனிதாபிமான அடிப்படையைக் கொண்ட தமிழரின் விடுதலைப் போராட்டத்தை, இந்திய அரசு ஆதரிக்கவேண்டும். பொதுத்தேர்தலை எதிர்கொண்டவாறு நிற்கும் இந்திய அரசியற் களத்தில், வென்று ஆட்சி அமைக்கப்போகும் கட்சி, ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன், மேற்குறித்த சாதக அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே, தமிழீழ மக்களின் விருப்பமும் - எதிர்பார்ப்புமாகும்!



## வீரவணக்கம்

லெப். கேணல் மதன் (இடது), மேஜர் வேங்கை (வலது) ஆகிய கரும்புலி வீரர்கள் இருவரும், முல்லைத்தீவுக் கடலில் புலிகளின் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்ட கடற் சண்டையின் போது, இன்னும் மூன்று கடற்புலி வீரர்களுடன் களப்பலியாகினர். 14.2. 1996 அன்று நடந்த இந்தப் பெருந்தாக்குதலை, சிங்களக் கடல், வான் படைகளின் துணையுடன், தனது இரண்டு சண்டைக் கப்பல்கள் சகிதம் இந்தியக் கடற்படையின் நாசகாரிக் கப்பல் ஒன்று நடாத்தியது.

# நிதிநகரத் தாக்குதல்:

# நிலைகுலையும் பொருளாதாரம்

## நிதிநகரத் தாக்குதல்

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி மத்திய வங்கிக்கருகே நடைபெற்ற குண்டு வெடிப்பில் சேதமடைந்த நிறுவனங்களில் பெரும்பாலானவை வங்கி - நிதி நிறுவனங்களாகும். மத்திய வங்கி, அம்ரோ வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இன்டோசூஸ் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, ஏ. ரி. என். வங்கி, செலான் வங்கி, உலக வர்த்தக நிலையம் (பங்குச் சந்தை மையமாக விளங்கும் இரட்டைக் கோபுரக் கட்டடத் தொகுதி), சிலிங்கோ நிறுவனம், மேர்ச்சண்ட் கிரடிட் நிறுவனம் போன்ற நிதி நிறுவனங்கள் இக்குண்டுவெடிப்பில் சேதமடைந்துள்ளன. மேலும் இன்ரகொன்ரினென்ரல், ஹில்டன், கலதாரி போன்ற ஐந்து நட்சத்திர உல்லாசப் பிரயாண ஹொட்டேல்களும்; இலங்கை ஹொட்டேல் கூட்டுத்தாபனமும் சேதமடைந்துள்ளன. இவற்றைவிட அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், ராய்ட்டர் ஆகிய செய்தி நிறுவனங்களும்; எயர்லங்கா, கே. எல். எம். என்பனவற்றின விமானப் பதிவு அலுவலகங்களும் சேதமடைந்துள்ளன. சேத விபரங்களைத் தரும்படி அரசாங்கம் 100 நிறுவனங்களுக்கு வினாக்கொத்துக்களை அனுப்பியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்களின் பணப்பெறுமதி இன்னும் மதிப்பிடப்படவில்லை. சேதமடைந்த பல கட்டடங்கள் மீளப் புனரமைக்கப்பட முடியாத நிலையிலேயே உள்ளன. இக்கட்டடத் தொகுதிகளை மீளமைப்பதற்கான செலவு, நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் என்பன அரசாங்கத்திற்கு பெரும் நிதிச்சுமையினை ஏற்படுத்தப் போகின்றன. கொலன்னாவைத் தாக்குதல்களினால் சேதமடைந்த எண்ணெய்க் குதங்களை அமைப்பதற்கு, இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போது நிதிநகரத்தை மீள அமைப்பதற்கும் நிதியினை ஒதுக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பிரமாண்டமான அளவிலான பாதுகாப்புச் செலவினால் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு கொழும்புத் தாக்குதல் மேலும் நெருக்கடியினைக் கொடுத்துள்ளது. அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவு முன்னெப்போதும் இல்லாத உயர்ந்த அளவான 3800 கோடி ரூபா (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5%) என்ற மட்டத்தினை அடைந்துவிட்டது. அரசாங்கம் தனது வருமானத்தில் ஏறத்தாழ 22 வீதத்தினை யுத்தத்திற்காகச் செலவிடுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நிதிநகரத்தைப் புனரமைக்கும் செலவு அரசாங்கத்திற்கு பெரும் சுமையாக அமையும். இவை போன்ற உடனடித் தாக்கங்கள் பாதிப்புக்கள் ஒருபுறமிருக்க, நிதிநகரத் தாக்குதல் இலங்கைப் பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட துறைகளில் எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போகும் பாதிப்புக்கள் மிகவும் பெரிதாகும்.

## உல்லாசப் பிரயாணத் தொழில்


1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தினைத் தொடர்ந்து வீழ்ச்சியுற்ற உல்லாசப் பயணத்துறை, கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாக படிப்படியாக மீட்சி பெறத் தொடங்கியிருந்தது. ஆனால், அண்மைக்காலங்களில் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொருளாதார மையங்கள் மீதான தாக்குதல்கள், உல்லாசப் பயணத்துறைக்குப் பலத்த அடியினைக் கொடுத்துள்ளன. இலங்கையில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் சுற்றுலாக் காலத்தின் உச்சக் கட்டம், நொவெம்பர் - மார்ச் மாதங்களை உள்ளடக்கிய வசந்தகாலத்தில் (Spring) ஏற்படுகின்றது. எனவே, இக்காலப்பகுதியில் கொழும்பில் நடைபெறும் தாக்குதல்கள் உல்லாசப் பிரயாணிகளின் வருகையைப் பெரிதும் பாதிக்கும். 1994ஆம் ஆண்டின் கடைசி இரண்டு மாதங்களில் (நொவெம்பர் - டிசெம்பர்) வருகை தந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை 76039 பேர். ஆனால் 1995ஆம் ஆண்டின்

## போரும் பொருளாதாரமும்

கடைசி இரண்டு மாதங்களில் வருகை தந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை 60366 பேர். எனவே, இக்காலப்பகுதியில் உல்லாசப் பிரயாணிகளின் வருகை ஏறத்தாழ 21 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் நடைபெற்ற கொலன்னாவைத் தாக்குதல், நொவெம்பர் மாத நடுப்பகுதியில் கொம்பனித்தெரு இராணுவத் தலைமையகத்திற்கு முன்பாக நடைபெற்ற இரண்டு குண்டு வெடிப்புக்கள் போன்றவற்றினாலேயே உல்லாசப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டது என, இலங்கை உல்லாசப் பயணச் சபைத் தலைவர் திரு. எச். எம். எஸ். சமரநாயக்கா கூறினார்.


தற்போது நிதிநகரத் தாக்குதலின்போது பல உல்லாசப் பயண ஐந்து நட்சத்திர ஹொட்டேல்கள் சேதமுற்றதுடன், பல உல்லாசப் பிரயாணிகளும் காயமடைந்துள்ளனர். ஹொட்டேல் இன்ரகொன்ரினென்ரல் மூடப்பட்டுவிட்டது. இச்சம்பவத்தினை அடுத்து ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சு, ''மறு அறிவித்தல் வரும்வரை இலங்கைக்குச் செல்லவேண்டாம்'' என தனது நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தமை, இலங்கை உல்லாசப் பயணத்துறையின் எதிர்காலத்தைக் கேள்விக்குரியதாக மாற்றியது. மேலும் ஆஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் குழுவினர் இலங்கையில் விளையாட மறுத்தமை நிலைமையை மேலும் மோசமாக்கி, இலங்கை ஒரு ஆபத்தான நாடு என்ற உணர்வினை வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் மத்தியில் ஏற்படுத்தியது.

உல்லாசப் பிரயாணிகளின் வருகை 1994-1995




கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி, இலங்கை உல்லாசப் பயணத்துறை அமைச்சர் திரு. தர்மசிறி சேனநாயக்கா இலங்கையின் உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிப்பதற்காக, லண்டனில் புதிய உல்லாசப் பயணச்சபை அலுவலகம்ஒன்றைத் திறந்துவைக்கின்றார். அதே நாளில் கொழும்பில், மத்திய வங்கித் தாக்குதல் நடைபெறுகின்றது. இதனையடுத்த சிலமணி நேரங்களில், லண்டனில் உள்ள உல்லாசப் பிரயாண ஏற்பாட்டாளர்கள் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதிகளோடு தொடர்பு கொண்டு, இவ்வாண்டுக்காக தாம் ஒதுக்கியிருந்த அறை ஒதுக்கீடுகள் அனைத்தையும் ரத்துச் செய்தனர். நிதிநகரத் தாக்குதல் இலங்கையின் உல்லாசப் பயணத் தொழிலினை எவ்வாறு பாதிக்கப்போகின்றது என்பதனை விளங்கிக் கொள்வதற்கு, இது ஒன்றே போதும். இத்தாக்குதலினால் 1996 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் (95 நொவெம்பர் - 96 மார்ச்) உல்லாசப் பிரயாணிகளின் வருகை 25 வீதத்தால் வீழ்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக உல்லாசப் பிரயாண ஹொட்டேல்களின் வருமானம் 25 - 35 வீதத்தால் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்தப் பங்கு விலைச் சுட்டெண் (ASPI)




## பங்குச் சந்தை

1980 களின் ஆரம்பத்தில், ஆசியாவின் புதிய முதலீட்டு மையம் என்று சர்வதேச தொடர்புச் சாதனங்களால் வர்ணிக்கப்பட்ட இலங்கை இன்று, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஒரு ஆபத்தான நாடாக விளங்குகின்றது. கொழும்புப் பங்குச் சந்தையில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி இதனை வெளிப்படுத்துகின்றது. 1994இல் கொழும்புப் பங்குச் சந்தையில் கொள்வனவு - விற்பனை செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி அதாவது புரள்வு (Turnover), 3451 கோடி ரூபாவாகும். ஆனால் 1995இல் கொழும்புப் பங்குச் சந்தையின் புரள்வு 67 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்குபற்றல் குறைவடைந்தமையே இதற்கு முக்கிய காரணமாகும். 1994ஆம் ஆண்டு கொழும்புப் பங்குச் சந்தையில் வெளிநாட்டவர்கள் 1447 கோடி ரூபா பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்து, 1310 கோடி ரூபா பெறுமதியான பங்குகளை விற்பனை செய்தனர். இதன் விளைவாக 1994 இல் 137 கோடி ரூபா முதலீடு தேறியதாக நாட்டிற்குள் வந்தது. மாறாக 1995இல் வெளிநாட்டவர்களால் 538 கோடி ரூபா பெறுமதியான பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு, 547 கோடி ரூபா பெறுமதியான பங்குகள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனவே, 1995இல் 9 கோடி ரூபா முதலீடு தேறியதாக நாட்டிலிருந்து வெளியேறி உள்ளது. எனவே, கொழும்புப் பங்குச் சந்தையில் 1994ஆம் ஆண்டு தேறிய கொள்வனவாளர்களாக இருந்த வெளிநாட்டவர்கள் 1995இல், தேறிய விற்பனையாளர்களாக மாறிவிட்டனர். எனவே இன்று வெளிநாட்டு முதலீட்டாளர்கள், கொழும்புப் பங்குச் சந்தையிலிருந்து பின்வாங்குபவர்களாக உள்ளனர்.

**சி. வரதராஜன்**

மத்திய வங்கிக் கட்டடத் தாக்குதல் கொழும்புப் பங்குச் சந்தையை மேலும் பாதிக்கும் என எதிர்பார்க்கலாம். மத்திய வங்கித் தாக்குதலைத் தொடர்ந்து, 22 நிறுவனங்கள் பங்குச் சந்தையில் பங்குபற்றுவதனை கொழும்புப் பங்குச் சந்தை தடைசெய்தது. கொழும்புப் பங்குச் சந்தையின் புரள்வில் ஏறத்தாழ 40 - 45 சதவீதத்தினை வங்கி - நிதி நிறுவனங்கள் வகிக்கின்றன. மேலும் 10 வீதமான புரள்வு உல்லாசப் பிரயாண விடுதிகள்மூலம் ஏற்படுகின்றது. மத்திய வங்கித் தாக்குதலின்போது பெரிதும் பாதிக்கப்பட்டவை வங்கி - நிதிநிறுவனங்களும், உல்லாசப் பிரயாண விடுதிகளுமே. எனவே, பங்குச் சந்தையின் புரள்வில் 50 வீதத்திற்கு மேற்பட்ட பங்கினை வகிக்கும் நிறுவனங்கள் இத்தாக்குதலில் சேதமடைந்ததனால், பங்குச் சந்தையின் புரள்வு எதிர்காலத்தில் பெரிதும் பாதிப்புறும் என எதிர்பார்க்கலாம். குண்டு வெடிப்புக்கு முந்திய தினம் வெளிநாட்டவர்கள் 26.6 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்தனர்; 10. 8 மில்லியன் ரூபா பங்குகளை விற்பனை செய்தனர். ஆனால் குண்டு வெடித்த அன்று வெளிநாட்டவர்கள் 2.2 மில்லியன் ரூபா பங்குகளை மட்டுமே கொள்வனவு செய்தனர். அதே நேரத்தில் இவர்கள் 15.2 மில். ரூபா பங்குகளை விற்பனை செய்தனர். குண்டு வெடித்தவுடன் பங்குச் சந்தையில் இத்தகைய தாக்கம் ஏற்பட்டபோதிலும், அடுத்த சில தினங்களில் நிலைமை ஓரளவு சீரடைந்தது. பங்குச் சந்தை விலை வீழ்ச்சியடையாமல் ஓரளவு உறுதியாக இருந்ததே இதற்குக் காரணமாகும். குண்டு வெடிப்புக்கு முந்தியதினம் மொத்தப் பங்கு விலைச் சுட்டெண் (ASPI) 667. 8 ஆக இருந்தது. அந்த வாரத்தின் முடிவில் அதாவது வெள்ளிக்கிழமை, மொத்தப் பங்குவிலைச் சுட்டெண் 665.6 ஆக இருந்தது. இவ்வாறு பங்குச் சந்தை விலை தொடர்ந்து உறுதியாக இருந்ததனையொட்டி மகிழ்ச்சியடைய முடியாது. ஏனெனில் விமானங்கள் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டமை, கொலன்னாவைத் தாக்குதல் போன்ற காரணங்களினால் ஏற்கெனவே மொத்த பங்கு விலைச் சுட்டெண் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்து தாழ்ந்த மட்டத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணப் படையெடுப்பு:

## தமிழ் மக்களுக்கு ஒரு செயன்முறைப் பாடம்

நிகழ்த்தப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு சமருக்கான போர்முறைத் திட்டத்தை வரைகின்றபோது, சிந்தனையின் மையமாக இருக்கவேண்டிய ஒரு அடிப்படைக் கோட்பாடு பற்றி, படைத்துறைப் பேரறிஞர் சன் சூ அறிவுறுத்தியுள்ளார். ''யுத்தக் கலை'' குறித்து அவர் விபரிக்கையில் -

''உன்னை அறி; எதிரியை அறி -
உனது பலவீனங்களையும்,
எதிரியின் பலங்களையும் கண்டறி -
அதன் பின்பு - தோல்வி பற்றிய
கவலையே இன்றி
நூறு சமர்களை நீ நடத்தலாம்''
என்று போதிக்கின்றார்.

அந்தப் போதனையினூடு சிந்தித்து, புலிப் படையினதும் - சிங்களப் படையினதும் பலச் சமநிலையை ஆய்ந்ததன் பெறுபேறாக 'சூரியப் பிரகாசம்' நடவடிக்கை எதிரியின் திட்டமிடலில் இருந்தபோதே செயல்வடிவம் பெறும்போது அது அடையப்போகும் முடிவை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்திருந்தது.

தனது இராணுவ இலக்கை எய்திடும் சாதகத்தன்மையை எதிரி கொண்டிருக்கிறான் என்பதை நாம் புரிந்துகொள்வதற்கு. எந்த ஒரு காரணமுமே தடையாக இருக்கவில்லை.

பொதுவாக இராணுவ உலகில் யுத்தமுறை இருவகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒன்று - மரபுவழி யுத்தமுறை எனப்படும் நேரடிப் போர். அடுத்தது கெரில்லா யுத்தமுறை எனப்படும் கரந்தடிப் போர்.

மரபுவழிப் போர்முறையில் படையெடுப்பாய் நிகழும் ஒரு நேரடிச் சமரின் முடிவை - ஆட்பல சக்தியையும், போர்க்கல சக்தியையும் இணைத்த முழுமைப்படுத்தப்பட்ட படைபலமே தீர்மானிக்கின்றது. இத் தன்மையற்ற மறுதரப்பின் மனோதிடமும் மதிநுட்பமும் எதிரியின் வெற்றியைத் தாமதப்படுத்த முடியுமேயன்றி, ஒருபோதுமே தடுத்துவிட முடியாது.

அதே சமயம் -

கெரில்லாப் போர்முறையில் அதிரடியாய் நிகழும் ஒரு கரந்தடித் தாக்குதலின் முடிவை - மனோதிடத்தையும், மதிநுட்பத்தையும் இணைத்த தந்திரோபாயம் மிக்க திட்டமிடலே தீர்மானிக்கின்றது. இத் தன்மையற்ற மறுதரப்பின் ஆட்பல சக்தியும், போர்க்கல சக்தியும் எதிரி பெறும் வெற்றியை முழுமையற்ற தாக்கலாமேயன்றி, ஒருபோதுமே முறியடித்துவிட முடியாது.



வரலாற்று இடப்பெயர்வு:
தானே தூக்கிச் செல்லப்படவேண்டிய வயதில், தான் தூக்கி நடக்கும் பிஞ்சு!

'சூரியப் பிரகாசம்' படையெடுப்பு முதல் வகையைச் சேர்ந்தது. அது மரபுவழிப் போர்முறையிலான ஒரு சமர். அந்த வகையில் -

ஏற்கெனவே தான் முன்னேறி நிலைகொண்டிருந்த புன்னாலைக்கட்டுவன் பகுதிகளிலிருந்து. 1995 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் 17 ஆம் நாள் சிங்களப் படை ஆக்கிரமிப்பைத் தொடங்குவதற்கு முன்னராகவே எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணம் நோக்கிய இறுதித் தாக்குதலின் முடிவும், எதிர்பார்க்கப்பட்டதாகவேதான் இருந்தது.

எனினும் -

தமிழினத்தின் தன்மானத்தின் மீதும். இன கௌரவத்தின் மீதும், நகர்த்தப்படுகின்றது என்பதற்காக, யாழ்ப்பாணப் படையெடுப்பை எதிர்கொண்டே ஆகவேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டியிருந்த நிலையில் -

சாதுர்யமாகவும். தந்திரோபாயமான வழிமுறைகளூடாகவும் படையணிகளை நகர்த்திய புலிகளின் தளபதிகள், எமது தரப்பில் பேரிழப்புகள் ஏற்படாத வகையான போர் நுட்ப உபாயங்களூடாக சமரை நெறிப்படுத்தினர்.

உன்னத பண்புகள் மிக்க சீரிய சமுதாயக் கட்டமைப்போடு நாம் கொண்டிருந்த கௌரவமான வாழ்முறையைக் குலைத்து, எம் சொந்தத் தொட்டில்களிலிருந்து - எங்களில் ஐந்தரை இலட்சம் பேர்களைக் குடியெழுப்பி, ஓரிரு இரவுகளிலேயே புலம்பெயரச் செய்து சொல்லில் அடங்காத் துன்பத்திற்குள் தோய்த்துவிட்ட ஓர் ஆக்கிரமிப்பு என்ற ரீதியில் -

'சூரியப் பிரகாசம்' சமரை இராணுவ ரீதியில் கற்றுணர்ந்து விளங்கிக்கொள்வது -

தமிழ்த் தேசிய இனம் தனது எதிர்காலம் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவை எடுப்பதற்கு - தான் இனிச் செய்யவேண்டியது என்ன என்பது குறித்த தெளிவான ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு - மிகச் சரியான வழியைக் காட்டும்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான எத்தனிப்பு எடுக்கப்பட்டது இதுதான் முதற் தடவை அல்ல; தனது நேரடிக் கட்டுப்பாட்டை அங்கு இழந்துவிட்ட காலத்திலிருந்தே, அதனை மீளக் கைப்பற்றுவதற்கான இராணுவ முனைப்புக்களில் சிங்கள தேசம் கிரமமான முறையில் ஈடுபட்டேதான் வந்தது.

ஜெயவர்த்தனாவுடன் அத்துலத்முதலியும், பிரேமதாசாவுடன் ஜெனரல் ரஞ்சன் விஜயரட்ணாவும் விஜயதுங்காவுடன் லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவும், சந்திரிகாவுடன் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவும் என, அரியாசனத்தில் அமர்ந்த ஆட்சியாளர்களால் எடுக்கப்பட்ட - ஒரு பத்தாண்டுகால முயற்சி அது.

1986ஆம் ஆண்டு யூன் திங்களில், குடாநாட்டைச் சூழ இருந்த எட்டு முகாம்களிலிருந்து முப்படைகளையும் ஒருங்கிணைத்து சமநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பன்முனைப் படைநகர்வுதான், குடாநாட்டிற்குள் தமது இராணுவ - நிர்வாகக் கட்டுப்பாட்டை மீளவும் நிலைபெறச்செய்ய சிங்கள ஆட்சி எடுத்த முதலாவது காத்திரமான படை நடவடிக்கையாகும்.

இதன் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்ட -

கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பித்தபோது முடித்துவைக்கப்பட்ட, வடமராட்சியூடான ''ஒப்பறேசன் லிபறேசன்'' -

சிங்கள தேசத்தின் மடியில் பிறந்த இன்னொரு துட்டகைமுனுவாகப் போற்றப்பட்ட லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவையும் மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண, ரியர் அட்மிரல் மொகான் ஜெயமகா உட்பட - அவரது தளபதிகளையும் வீழ்த்திய அராலிக் கண்ணிவெடியோடு கருச்சிதைவுக்குள்ளாக்கப்பட்ட, தீவுப்பகுதியினூடான ''ஒப்பறேசன் ஃபைனல் கவுண்டவுண்'' -

வரலாற்றுப் புகழைப் பெற்ற புலோப்பளை அதிரடியோடு பாதிவழியில் தடம்புரண்டு, மீதிவழி செல்லாமல், வந்தவழி திரும்பிய தென்மராட்சியூடான ''ஒப்பறேசன் யாழ்தேவி'' -

''முன்னேறிய பாய்ச்சல்'' மீது எதிர்ப்பாய்ச்சலாக வீழ்ந்த 'புலிப்பாய்ச்சலோடு பின்னோக்கிச் சென்றுவிட்ட வலிகாமம் மேற்கினூடான ஒப்பறேசன் ''லீப் ஃபோவேட்'' என்ற வரிசையின், கடைசி நடவடிக்கைதான் -

வலிகாமம் கிழக்கினூடான ''சூரியப் பிரகாசம்'' எனப்படும் ''ஒப்பறேசன் ரிவிரெச'' ஆகும்.



கடந்த ஒரு தசாப்த காலமாக, தமிழர்களின் தளராத கோட்டையாகத் திகழ்ந்தது யாழ்ப்பாணம். தமிழ்ச் சமூகத்தின் சமூக - பொருளாதார வாழ்வினதும், அதற்கே உரித்தான பண்பாட்டு வழக்கங்களினதும் உறைவிடமாக மட்டுமல்ல; பெருக்கெடுத்துப் பாயும் விடுதலைப் புரட்சிப் பேராற்றின் மைய ஊற்றுக்கண்ணாகவும் விளங்கியது யாழ்ப்பாணம். சிங்களப் பகுதிகள் எதுவும் எல்லையாக இல்லாமல், சர்வதேசக் கடலை மட்டுமே வேலியாகக் கொண்டு தமிழர்கட்குப் பாதுகாப்பான ஒரு புவியியல் அமைவிடத்தைப் பெற்றுள்ள, தமிழீழத்தின் தனித்துவமான ஒரு தரைப்பகுதியாகக் கொலுவிருப்பது யாழ்ப்பாணம். ஆதலால் - ஆண்டாண்டு காலமாக அல்லற்பட்ட தமிழினம் எங்கெல்லாமோ இருந்து ஓடிவந்த போதெல்லாம், தாய் மடியாகி அரவணைத்தது யாழ்ப்பாணம்.

அத்தகைய மகுடங்களைச் சூடிய எம் மண்ணைக் காக்க, தேசத்தின் அத்தனை பிரதேசங்களையும் சேர்ந்த படைவீரர்களும் போரிட்டுள்ளார்கள். எதிரிகளின் சுடுகுழல்களின் முன்னால் அரண்களாய் வீழ்ந்துள்ளார்கள். எதிரியின் ஒவ்வொரு படையெடுப்பையும் முறியடித்து - ஒவ்வொரு தடவை தோல்வியைத் தழுவுகையிலும் முன்னையதை விடக் கூர்மைப்பட்ட படையெடுப்பை அவன் அடுத்த தடவை ஏவிவிடுகையில் அதனையும் முறியடித்து - பத்தாண்டு காலமாக யாழ்மண்ணைக் காத்த இரும்புக் கவசமாக நாம் விளங்கினோம்.

இலங்கைத்தீவு முழுவதிலும் - குறிப்பாக வடக்குக் கிழக்குப் போர் அரங்குகளில் - தனது படைபலம் சிதறிக் கிடந்ததால், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் தான் மேற்கொள்ளவேண்டியிருந்த யாழ்குடா மீதான முன்னைய படையெடுப்புக்கள் மூலமாகத் தனது இலக்கை அடைய முடியாமல்போன சிங்களப் படைத்துறை -

அந்தப் பட்டறிவில் கற்ற போரியல் பாடங்களிலிருந்து ''சூரியப் பிரகாசம்'' படைநகர்வைத் திட்டமிட்டது. ஒருங்கிணைத்த படைபலத்தை ஒரே களத்தினூடு பிரயோகித்து, புலிகளை அழித்து அல்லது அகற்றி முன்னேறுவதுதான் ''சூரியப் பிரகாச''த்தின் மூலோபாயமாகும்.

படைபலச் சமநிலையில் எம்மைவிட எதிரி மேலோங்கியிருந்தபோதுமகூட, சில வேளைகளில் அதிர்ஷ்டமும் பல வேளைகளில் திறமையும் துணைநின்றதால் எம்மால் முறியடிக்க முடிந்த முன்னைய படையெடுப்புக்களைப் போல இல்லாமல் -

எம் கைகளை மீறிக் கடந்த ''சூரியப் பிரகாசம்'' படையெடுப்பு முற்றுமுழுதாக படைபலத்தின் கைகளிலேயே வீற்றிருந்தது.

எதிரியானவன் மிகமிகப் பெருமெடுப்பில் தன்னைத் தயார்ப்படுத்தினான்; ''அரசியல் தீர்வை அடைவதற்கான இராணுவ வழிமுறை'' என்று, அந்நிய நாடுகளிடம் ஆசீர்வாதம் பெற்றான்; முன்னைய ஆட்சியினர் எழுதிய படைத்தளபாட உடன்படிக்கைகளைப் புதுப்பித்துப் போர்க்கலங்களைக் கொள்வனவு செய்தான்; யாழ்ப்பாணப் போர்முனை எனும் சதுரங்க மேடையில் வெற்றியீட்டுவதற்காக, தனது கட்டுப்பாட்டிலிருந்த சில தளப்பிரதேசங்களைக் கைவிடவும் சித்தமானான். கிழக்குப் பிராந்தியத்தில் நிலைகொண்டிருந்த தனது கணிசமான போரணிகளை வெளியேற்றி, வடக்கிற்கு நகர்த்தினான்; தனது வழங்கற் பாதைகளை அடிக்கடி தாக்கி புலிகள் சேதப்படுத்தியபோதும், கடலூர்திகளிலும் வானூர்திகளிலும் படைவீரர்களை ஏற்றி - அபாயங்களை ஊடறுத்து பலாலிக்குக் கடவினான்.

ஏற்கெனவே இருந்த பத்தாயிரம் பேருடன், இன்னும் கூடுதலாக இருபத்தையாயிரம் துருப்புக்களை செருக்களத்தில் குவித்தான்; முப்படையின் பணிகளையும் ஒருமுகப்படுத்தினான்; தனது வரலாற்றில் என்றுமே இல்லாத பெரும் ஆளணி - ஆயுதக் குவிப்பைச் செய்து, யாழ்ப்பாணச் சமருக்கு பகைவன் ஆயத்தப்படுத்தினான். சிறீலங்கா நாட்டின் தேசிய படைபலத்தை



வரலாற்று இடப்பெயர்வு: எடுத்த பொருளோடே வந்தோம்-இனிப் போவது எங்கு?

முழுமையாகத் திரட்டி ''சூரியப் பிரகாச''த்தினூடு பிரயோகித்தான்.

மிகமிக அதிகமான படைக்கலச் சக்தியோடு, போதியளவுக்கும் மிகையாக ஆயிரக்கணக்கான டசின் துருப்புக்கள் அங்கம் வகித்த அதிகாரபூர்வமான ஒரு தேசியப்படையை நகர்த்தி, நீண்டதொரு மரபுவழிச் சமராக எதிரி அரங்கேற்றிய யாழ்ப்பாணப் படையெடுப்பை -

மிகக் குறைந்த ஆட்பலத்துடன், அரைகுறையான வளங்களுடன, முழுமையற்ற படையமைப்பைக்கொண்ட கெரில்லா இயக்கமொன்று எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ''முன்னேறிய பாய்ச்சலை'' முறியடித்தது போல இதனையும் தடுத்து நிறுத்த முடியாமல் போனது ஒரு அதிசயமேயல்ல. ஏனெனில், இரண்டிற்கும் இடையிலான இராணுவப் பரிமாணம் வேறுபட்டது.

எல்லாளர் மண்ணை வீழ்த்தி சிங்கக் கொடியை நாட்டிய இன்றைய துட்டகைமுனுவாகவும், 'ஜெனரல்' தரத்திற்கு அருகதையைப் பெற்றுவிட்ட சிங்கள தேசத்தின் ஒரு மாபெரும் போர்த் தளகர்த்தராகவும் திரும்பிச் சென்ற சிறீலங்காவின் படைத்துறை அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, 'சூரியப் பிரகாசம்' பற்றி செய்தியாளர்களுக்கு விபரிக்கையில், 'முன்னேறும் பாய்ச்சல ஒரு முன ஒத்திகை போல அமைந்துவிட்டது' என்றார். அது உண்மைதான்.

12,000 துருப்புக்களையே கொண்ட படை அணிகளுடன், தேவையானது எனக் கணிக்கப்பட்ட அளவுடைய வளங்களுடன் மட்டும் ஈடுபடுத்தப்பட்ட அந்தப் படை நடவடிக்கை -

புலிகளை முறியடித்து முன்னேறக்கூடிய தாக்குதற் சக்தியைக கொண்டிருக்கவில்லை; அல்லது அந்த நடவடிக்கையை முறியடிக்கக் கூடிய, தற்காப்புச் சக்தயைப் புலிகள் கொண்டிருந்தனா:

அந்த முன் ஒத்திகையின் அனுபவத்தைத் தெளிவாக உள்வாங்கிய எதிரி, அநதப பட்டறிவினூடு தனது இறுதி நடவடிக்கைக்கான திட்டத்தை வரைந்தான். புலிகளை முறியடிக்கக் கூடிய பலத்தை, அல்லது புலிகளால் முறியடிக்கப்பட முடியாத பலத்தைத் திரட்டுவதற்காக - ''முன்னேறிய பாய்ச்ச''லைபபோல மும்மடங்கு ஆட்தொகையையும், பன்மடங்கு படைக்கலத்தையும் தயார்ப்படுத்தினான். முனைப்பான ஏற்பாடுகளில் அவன மூன்று மாத காலமாக ஈடுபட்டான்; ஆனால், நடந்த தவறு என்னவெனில் -

அந்தக் கால அவகாசத்தை முழுமையான முறையில் பயன்படுத்தி, தமிழர் படையைத் தயார்ப்படுத்த வருமாறு புலிகள் விடுத்த அழைப்பைத் தமிழ் இளம் பரம்பரை செவிமடுக்காது விட்டுவிட்டதுதான்.

எதிரியின் பலம் மடங்குகளால் அதிகரித்த போது, எமது பலம் இருந்த அளவிலேயே இருந்தது ''லீப் ஃபோவட்''டிற்கும் ''ரிவிரெச''வுக்கும் இடைப்பட்ட காலவேளையில், யாழ்ப்பாணப் போர் அரங்கின் படைபலச் சமநிலையில் எதிரி மேலோங்கி வருகின்ற ஆபத்து நிகழ்ந்தது.

''முன்னேறும் பாய்ச்ச''லை முன் உதாரணமாகக் கொள்ளுமாறுதான் இங்கும் கேட்கப்பட்டது; புலிகளிடம் உள்ள சண்டைப் பலம் அதை முறியடிக்க மட்டுமே போதுமானதாக இருந்தது என்பது விளக்கப்பட்டது; அதை விடவும் அதிக பலம் செலுத்தப்படுமானால், முறியடிப்பது இயலாத காரியமாகலாம் என்பது தெளிவுபடுத்தப்பட்டது; எதிரி அவ்விதமான ஒருமுற்சிக்கே ஏறபாடு செய்துகொண்டிருக்கிறான் என்பது எடுத்துச் சொல்லப்பட்டது; அன்றைய அனர்த்தங்களின் அவலங்கள் ஒளிப்படங்களாய் காட்டப்பட்டது; எதிரி நகர்ந்தால் என்ன நடக்கும் என்பது உணர்த்தப்பட்டது யாழ்ப்பாணம் மீது நடாத்தப்படப் போகின்ற உறுதியான இறுதித் தாக்குதலை முறியடிக்க, புலிப்படையில் இணைந்து தமிழரின் தேசிய படைபலத்தைப் பெருக்குமாறு, யாழ்ப்பாணச் சமூகத்தின் இளம் சந்ததியை நோக்கி முரசறையப்பட்டது; சந்துபொந்துகளிலெல்லாம் தேடிச் சந்தித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் -

அந்த அழைப்பை அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் கிரகித்து. புரிந்துணர்ந்து செயற்பட எமது இளம் சமூகம் வேண்டிய அளவுக்கு முன்வரவில்லை. விளைவு -

வலிகாமத்தின் முற்றத்திலிருந்து எம்மைக் குடியெழுப்பிக் கலைத்ததற்காக ''பரம வீர விக்கிரய'' என்ற உயர் விருதைப் பெற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல்கள் றொகான் தலுவத்தவும், சிறீலால் வீரசூரியவும், பிரிகேடியர் ஜானக பெரேராவோடு ஏனைய நடவடிக்கைத் தளபதிகளும் - அடுத்த படையெடுப்புக்கான போர்முறைத் திட்டத்தை இப்போது வரைந்துகொண்டிருக்கின்றார்கள்.

12 வருடப் போரில் இதுகாலவரை ஒருங்கு திரட்டியிராத விதமாக, தனது முற்றுமுழுதான படைக்கலச் சக்தியையும் எதிரி யாழ்ப்பாணச் சமரில ஒருங்கிணைத்திருந்தான். யாழ்நகரைக் கைப்பற்றுதல் என்ற தனது இராணுவ இலக்கை எய்தும் நாள் வரை சமரைத் தொடர்நது செல்வதற்குச் சாதகமாக, ஒவ்வொரு நாள் சண்டைகளிலும் எவ்வித மட்டுப்படுத்தல்களுமற்று பாவிக்கக்கூடியதாக, போர்க் கருவிகளுக்கான வெடிப்பொருட்களை எதிரி குவித்திருந்தான். இங்கு, எதிரியின எறிகணைகள் முக்கியமானவை. சமர் அரங்கின் பிரதான பாத்திரத்தை அவைதான் வகித்தன. எமது தரப்பிலிருந்து சுடப்பட்ட ஒவ்வொரு சன்னத்திற்கும எதிரி பத்துவரையான எறிகணைகளை ஏவியே பதிலளித்தான் என்று சொன்னால, அது ஒரு பொய்யான வர்ணிப்பு அல்ல. எமது போராளிகளுக்குப் பேரழிவுகளை ஏற்படுத்தும நோக்கத்திறகாக மட்டுமல்லாமல், தகவல் தொடர்பு சாதனங்களின அலைவரிசைகளைக் கிரகித்து, ஒலிபரப்பாகும் பீடத்தைக் கண்டறியும் Direction finderகள் மூலம எமது கட்டளை மையங்களை இனங்கண்டு தாக்கவும் எதிரிக்கு எறிகணைகள் துணை நின்றன. கட்டளைப பீடங்களையும் தளபதிகளையும் குறிவைத்துத் தாக்கி, எமது சண்டையணிகளின ஒழுங்கமைவுகளைச் சீர்குலைக்கவேண்டிய தனது தேவையை நிறைவு செய்வதற்காக, பலாலியின் ஆட்டிலறி ஏவுதளங்களிலிருந்து எதிரி எறிகணைகளை விசினான். சுருங்கக் கூறின், எதிரியின் சார்பில் எறிகணைகள்தான் சண்டைபிடித்தன எனலாம். சிங்களத் தரைப் படையின் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டீ சில்வா, 'சண்டேரைம்'சுக்கு வெற்றிப் பெருமிதத்தோடு வழங்கிய செவ்வியில், ''ஆட்டிலறி மற்றும் மோட்டர் பீரங்கி''களுக்கு தனது ''மனமார்ந்த நன்றி''யைத் தெரிவிப்பதிலிருந்தே, அவை வழங்கிய அதி உச்சப் பங்களிப்பை நாம் புரிந்துகொள்ள முடியும்.

எமது சண்டையணிகளின் அசைவுகளைத் தடுத்து, கட்டமைப்புக்களைக் குலைத்து - அவற்றின் போர்த்திறனைச் சிதைத்துவிடுவதற்காக எதிரி நிகழ்த்திய வரையறைகளற்ற ஆயுத பலப் பிரயோகம், களத்தில் நின்ற எம் வீரர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது உட்பட - நாம் எதிர்கொண்ட சிக்கல்கள் எல்லாமே, எமது ஆட்பற்றாக்குறையில் மையங்கொண்டவையாகவே இருந்தன.

ஆயுத பலம் போதாமை எமது சண்டைகளுக்கு இடையூறாகத்தான் இருந்தது. எனினும், ஆட்தொகைப் பற்றாக்குறைதான் அதைவிடவும் பாரிய சிக்கலைத் தந்தது.


படையினரின் நகர்வுகளைக் கட்டுப்படுத்தி - வெளியேறி நடமாட முடியாமல் முகாம்களுக்குள் முடக்கி, அவர்களது ஆதிக்கத்தின் கீழிருந்து சில பிரதேசங்களை விடுவித்து - ஒரு நிழல் நிர்வாக இயந்திரத்தை இயக்குவிப்பதற்கான பாதுகாப்பை வழங்க, எம்மிடமிருந்த படைபலம் போதுமானதாயிருந்தது. இதுவரை காலமும் அவ்வாறானதொரு கட்டுப்பாட்டுத் தளப் பிரதேசமாக குடாநாட்டையும் வைத்திருக்க முடிந்தது. ஆனால் - தற்போதைய படைபலத்தை வைத்துக்கொண்டு, எத்தகைய பேராபாயம் நேரிடினும் குடாநாட்டைப் பாதுகாத்து நிற்க முடியும் என்று, நாம் எப்போதுமே நம்பியிருந்ததில்லை; ஏனெனில் - எமது சுயபலம் பற்றிய சரியானதொரு மதிப்பீடு எம்மிடமிருந்தது. மிகப் பெருமெடுப்பில் நிகழப்போகும் சிங்களப் படையெடுப்பிலிருந்து குடாநாட்டைக் காக்க வேண்டுமெனில எமது படைபலம் இன்னும் பன்மடங்கு அதிகரிக்கப்பட வேண்டுமென்றுதான், நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். ஒரு தேசியக் கடமையாக அதனை ஆற்ற அணிதிரண்டு வருமாறு இளைய உள்ளங்களை வேண்டிநின்றோம். அப்போது, 'இயக்கம் விடாது' என்று சொல்லிக்கொண்டு எல்லாரும் அவரவர் அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருந்ததன் விளைவை இப்போது, நாம் ஒவ்வொருவருமே அனுபவிக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

மரபுவழிச் சமரொன்றுக்குத் தயார்ப்படுத்தப்படுகின்ற ஒரு போரணி, தனது முன்னணித் தாக்குதற் பிரிவைத் தவிரவும், பின்களச் செயற்பாடுகளுக்காக முக்கியமான நான்கு உப அணிகளை மேலதிகமாகக் கொண்டிருக்கும் என்பது, ஒரு பொதுவான போரியல் நடைமுறையாகும்.

தாக்குதலணிக்கான வெடிப்பொருட்களையும் கருவிகளையும் விநியோகிக்கும் வழங்கற் குழு, காயமடையும் - களப்பலியாகும் வீரர்களைப் பின்னுக்கு அகற்றும் காவும் குழு, தாக்குதலணியோடு களத்திலிறங்கி காப்பு நிலைகளை நிறுவும அரணமைக்கும் குழு, இந்த அத்தனை குழுக்களோடும் கலந்தும தனித்தும் இயங்கும் மருத்துவக் குழு என்பவையே அவையாகும். இங்கு முன்னணித் தாக்குதற்பிரிவைப போன்று, சில சமயங்களில் அதைவிடவும் அதிக எண்ணிக்கையானோர் பின்கள வேலைகளுக்கெனத் தேவைப்படுவர்.

இச்சூழ்நிலையில் - படையெடுப்பை முறியடிக்கும் மூலோபாயத்திற்காக ஊடுருவித் தாக்கும் தந்திரோபாயம் ஒன்றை நாம செயற்படுத்த வேண்டுமெனில், இத்தனை குழுக்களையும் கொண்ட இன்னொரு போரணியை உருவாக்கப் பெருமளவு வீரர்கள் தேவையாக இருப்பர்.

யாழ்ப்பாணச் சமரில், எதிரிப் படையினரது எண்ணிக்கையைவிட பலமடங்கு குறைவான ஆட்தொகையைக் கொண்ட புலிவீரர்களே - எதிரியைப் போல பிற பௌதீக வசதிகள் எதுவுமற்ற நிலையில் - களத்தில் நின்றனர் என்பது, இங்கு சொல்லப்படவேண்டிய ஒன்றாகும்.



பெண்புலிகள்: இடையறாத சமர்க்களத்தில் ஓய்வற்ற போர்ப் பணிகள்

காப்பரண்களை நிறுவும் வேலைகளில் பெருமளவிலான உதவிகளை எம் மக்கள் செய்திருப்பினும்கூட, அவர்களைக் கூட்டிச்செல்ல முடியாத - உயிராபத்து நிறைந்த - சண்டையின் முன்னணி நிலைகளில், எமது போராளிகளே அரணமைக்கும் வேலைகளிலும் ஈடுபடவேண்டியிருந்தது. யுத்த முனைகளில் இயல்பாகவே நிலவக்கூடிய சீரற்ற உணவு விநியோகத்தின் மத்தியில், அவர்கள் தமது சக்திக்கு மீறித் தொழிற்பட்டார்கள். பல சந்தர்ப்பங்களில், அவர்கள் 48 மணிநேரத்திற்கு மேல் தூக்கமற்றும் செயற்பட்டார்கள்; பகலில் சண்டையிட்ட பின் இரவில் அரண்களைச் சீரமைத்து நிலைகளைப் பலப்படுத்திக்கொண்டு, அடுத்த நாள் சண்டைக்காக விடியும் வரை விழித்திருந்தார்கள். இது வெறும் புகழ்ச்சியில்லை; மிகைப்படுத்தலுமில்லை.

உறுமி வரும் 'டாங்கி'களின் பீரங்கிக் குழல்வாய்கள் நெருப்புமிழும் அதிகாலை இருளில், பகைவன் அன்றைய களத்தைத் திறப்பான்! தாக்கி முன்னேறும் அவனது சண்டையணி எறிகணைகளின் மனமார்ந்த உறுதுணையோடு ஊரத் தொடங்கும்! இயந்திரத் துப்பாக்கிகள் இதயம் திறந்து பேசிக்கொள்ள, இறுக்கமாய் வெடிக்கும் சண்டை! உடைத்தெறிந்து விரைய முனைந்து உக்கிரமாய்த் தாக்கும் பகையணியைத் தடுத்து, உருக்கின் கவசமெனப் புலியணி பொருதும்! மூர்க்கத்தனமாய் மோதிப் பகையை முறியடிக்கும்! களமெங்கும் எதிரிகளின் சடலங்கள் வீழும்! பீரங்கிக் கவச வண்டிகள் பிளக்கும்! எஞ்சியவை ஓடும்! பகையணி சிதறும்! சின்னாபின்னமாகும்! இருந்த நிலைகளை விட்டே பின்வாங்கி ஓடும்! அந்தக் கணப்பொழுதில் களத்திலிறக்கி, பகைவனை விரட்டிய முனைகளில் நிலைப்படுத்தி, அரண்களைப் பலப்படுத்தி உறுதியாய் நிறுத்திவிட மேலதிக படையணிகள் எம்மிடமில்லை. அத்தகைய எமது பாதக நிலைதான், எதிரிக்கு வாய்த்த சாதகமாகும்.

சண்டையில் விளைந்த எம்பக்கப் பாதிப்பை எமதணி நிவர்த்தி செய்வதற்குக்கூட அவகாசமில்லாமலேயே - தயாராய் நிறுத்தப்பட்டிருக்கும் இன்னொரு தாக்குதற்பிரிவை எதிரி களத்திலிறக்குவான்; பலவீனப்பட்ட அணியைப் பின்னாலும், பலமான புது அணியை முன்னாலும் சமநேரத்தில் நகர்த்துவான். உக்கிர சண்டைக்கு நடுவில் மிகக் குறுகிய நேரத்திற்குள் அது நிகழும். திடீரென - எதிர்பாராதவிதமாக - களத்தில் எதிரியிடமிருந்து, புதுத்தெம்பு பெற்ற தாக்குதல் வரும். சேதப்பட்டு, சோர்வுப்பட்டு ஆரம்பச் சண்டையிலேயே எமதணி தளர்வடைந்திருப்பினும் தொடர்ந்து மோதும்; இயலாமைக்கு அப்பாலும் முயலும். மனங்குலையாமல் அது சண்டையிட - களம் நீளும்; களம் நீளக் களம் நீள, எதிரி இறக்கிய இரண்டாவது அணியும் தளர்வடையும். வீரர் விழவும், சண்டைத் திறன் குறையவும் பலவீனப்படும் எதிரியணி நிலைகுலையும். அப்போது - எதிரியானவன் தனது மூன்றாவது தாக்குதற் பிரிவை சண்டையிலிறக்குவான்; நிலைமை சிக்கலாகும். தொடர்ந்தும் தாக்குப் பிடிப்பது எமக்கு முடியாத காரியமாகும்; தடுத்துச் சண்டையிட இயலாத நிலை களத்தில் தோன்றும்.

சிதைவடைந்துவிடுவதால் மட்டுமல்ல; சண்டைகள் நீண்டு செல்லும் சந்தர்ப்பங்களில், தனது போரணியின் வீரர்கள் களைப்படைந்துவிடாமல் அவர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காகக்கூட, அடுத்த அணியைச் சண்டையிலிறக்கி, அவர்களைப் பின்னுக்கு எடுப்பான் பகைவன். அவனிடம் வளமிருந்தது; ஆளணியின் பலமிருந்தது.

எம்மிடம் மாற்றிவிட அணிகளுமிருக்கவில்லை; ஏதாவது மாற்றுவழிகளுமிருக்கவில்லை. சமரைத் தொடர்ந்து நடாத்த வேண்டியதற்காகவும், எமது இழப்புக்களை வரையறைக்குள் வைத்திருப்பதற்காகவும் நாம் தந்திரோபாய ரீதியாகப் பின்வாங்கவேண்டியவர்களாக இருந்தோம். '' சூரியப் பிரகாசம் '' எழுந்த ஒவ்வொரு நாளைய சண்டைகளின் முடிவிலும் எமது சக்திக்கு மீறிய ஒரு நிர்ப்பந்தமாக எதிரி முன்னேறுவதை, மெல்ல மெல்ல நாம் அனுமதிக்கவேண்டியிருந்தது. ஆனாலும் -

எதிரியின் நகர்வைத் தடுத்து, பகையணியைத் தாமதிக்கவேண்டிய கட்டாய முடிவொன்றை ஒரு கட்டத்தில் நாம் தவிர்க்க முடியாததாகச் செயற்படுத்த வேண்டியதாக இருந்தது.

'' சூரியப் பிரகாசம் '' தனது முடிவை நெருங்கிக்கொண்டிருந்த நொவெம்பர் திங்களின் இறுதி நாட்களில், யாழ்நகரை நாற்புறமும் சூழ்ந்துவிட்ட படையணிகளுக்கு மத்தியில் நின்று, புலிகள் உக்கிரமான அந்தச் சண்டையிலிறங்கினர். சுண்டுக்குளி கச்சேரியடிப் பகுதியூடாகவும், நல்லூர் கந்தர்மடம் பகுதியூடாகவும், நீராவியடி பெருமாள் கோவிலடிப் பகுதியூடாகவும், பண்ணை கொட்டடிப் பகுதியூடாகவும் வியூகமிட்டு முன்னேறிய படையணிகளைப் புலிகள் மூர்க்கத்தனமாய் எதிர்கொண்டனர். "தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளன்று அல்லது மாவீரர் நாளன்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, தமிழர்களின் இன கௌரவத்தின் மீது சிங்கக்கொடியை ஏற்றத் திட்டமிட்டு முன்னேறிய சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் பேரினவாத நோக்கத்தை உடைத்தெறியவேண்டிய தமது கடமைப்பாட்டை, புலிவீரர்களும் அவர்தம் தளபதிகளும் வெற்றிகரமாகவே நிறைவேற்றினர்.

வரலாறு காணாத ஒரு பிரமாண்டமான களத்தை எதிர்கொண்டு, 50 நாட்களுக்குச் சமரை நீடித்துச் சென்ற எம் தளபதிகளின் படைநகர்த்தல் திறன் அற்புதமானது; போரியல் வல்லுநர்களையே வியப்புக்குள்ளாக்கியது! முற்றுகையிடப்பட்டுவிட்ட வலிகாமத்திற்குள் சிக்கிக்கொண்டுள்ள புலிகள், இனிச் சரணடைய வேண்டும்; அல்லது கடலில் குதிக்க வேண்டும்; அல்லது 'சயனைட்'டின் சுவையறிந்து தற்கொலை செய்யவேண்டுமென எதிரி பிரமாதமாகப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்த வேளையில், முற்றுகையிலிருந்து தப்பித்து எப்படிப் படையணிகளை வெளியேற்றினர் என்ற கேள்விக்கு, அல்லது, இன்னமும் வலிகாமத்திற்குள் எப்படிப் படையினர் தாக்கப்படுகின்றனர் என்ற கேள்விக்கு அவர்களே பதில்; அதிசயப் பதில்! பிரபாகரனின் கள நாயகர்களாகி, அவரது எண்ணங்களையும் நுட்பங்களையும் களத்தில் செயற்படுத்தும் வழிநடத்துநர்களாகி, '' சூரியப் பிரகாச ''த்தின் உதயத்திலிருந்து மறைவு வரை சண்டைகளை நெறிப்படுத்திய எம் விடுதலைச் சேனையின் சேனாதிபதிகளது வினைத்திறன் அசாதாரணமானது; எதிரிகளினாலேயே வியந்துரைக்கப்பட்டது!

தனது படைவீரர்களையிட்டு என்றென்றும் எம்தேசம் தலைநிமிர்த்த முடியும்! '' நாங்கள் தமிழர்கள் '' எனத் தமிழர்களை இறுமாப்போடு கர்வப்படவைத்தவர்கள் அவர்களது பிள்ளைகள்! விடுதலைப் புலிகளின் படையணிகளிலும், தமிழீழ காவல்துறையின் சண்டைப் பிரிவுகளிலும் களத்திலிறங்கி, பொருது களங்களில் எதிரிகளை அவர்கள் திணறடித்தார்கள். யாழ்ப்பாணப் போர்முனையிலும் அது வெடித்த ஓரிரு நாட்களுள், எவருமே எதிர்பார்த்திராத பகையரசின் இன்னொரு மையத்திலும் நம்புதற்கரிய விதமாக, அவர்கள் ஆடிய சண்டைகள், உயிர் சிலிர்க்கவைக்கும் - ஆச்சரியப் போர்க்கதைகள்! யாழ்ப்பாணச் சமரை கடைசி வரைக்கும் நடாத்தியே ஆகவேண்டும் என்ற - அரசியல், இராணுவ ரீதிகளிலானதும் இனமானத்தோடு சம்பந்தப்பட்டதுமான - ஒரு தேவைக்காக, தங்களது உடற் பலவீனங்களுக்கு முகம் கொடுத்து அவர்கள் ஆற்றிய உழைப்பு அளப்பரியது: உன்னதமானது. விழுப்புண் பட்டுச் சென்ற வீரர்கள் மருந்திட்டு வந்து போரிட்டார்கள்; மறுபடியும் காயப்பட்டுச் சென்றும் மறுபடியும் களத்திற்கு வந்தார்கள். மூன்றாவது முறையாகப் புண்பட்டவர்களுமுண்டு; அதன் பின்பும் களப்பலியாகிவிட்டவர்களுமுண்டு! எம் தேசத்தின் 674 புதல்வர்கள் இந்த வரலாற்றுச் சமரில் பங்கேற்று '' இடிமுழக்கத் '' தினதும், '' சூரியப் பிரகாசத் '' தினதும் கதாநாயகர்களாக யாழ்ப்பாணத்தின் மடியில் வீழ்ந்தார்கள்; எமது மண்ணின் ஒவ்வொரு துணிக்கைக்காகவும் நாம் உயிரீந்து போரிட்ட இன்றைய நாட்களின் இரத்தச் சாட்சிகளாகிச் சரித்திரமானார்கள்!

ஒக்ரோபர் 30ஆம் 31ஆம் திகதிகள் வரலாற்றின் நாட்கள்! புலிகளின் அரசியற் பலம் எனப்படுவது, தமிழினத்தின் ஏகோபித்த பலமேதான் என்பது, உலகத்தின் செவிகளில் முரசறையப்பட்டது! எம் நாட்டின் நிரந்தர சுபீட்சமொன்றுக்காக எதைத் துறக்கவும் தயார் என எம்மினம் பறைசாற்றியது! '' பாதுகாப்பிற்காகச் செல்லுங்கள்! '' எனச்சொன்ன அடுத்த நொடியில், எடுத்தபொருளோடு எழுந்து நடந்து, '' எவருக்கும் இனி நாங்கள் தலைகுனிந்து வாழத் தயாரில்லை! '' என்பதைப் பிரகடனப்படுத்தியது. சோற்றுப் பசி வாட்டித் துவண்டு சாக நேரினும், சுதந்திரப் பசி குன்றித் திரும்பி வரப்போவதில்லை என, எம்மக்கள் நாவற்குழிப் பாலம் தாண்டி நடந்து சென்ற நாட்கள் -

செய்தி அறிந்தபோது ஒவ்வொரு புலிவீரனும் மேனி சிலிர்த்தான்! உள்ளம் நெகிழ்ந்தான்! களத்தில் சண்டையிட்ட ஒவ்வொரு கணத்திலும் அதையே நினைத்தான்! இனம் புரியாத தென்பு பெற்றுச் சமராடினான்! இடப்பெயர்வால் அவர்கள் பட்ட துன்பங்களுக்காக - மனந்துவண்டு, ஊர் துறந்து அவர்கள் செய்த போராட்டப் பங்களிப்புக்காக - சிரம் தாழ்த்தினான்! அவர்களது தேசபக்தியின் முன்னால் மரியாதை வணக்கம் செலுத்தினான்! நெருப்பு மழைக்கு நடுவில் களமாடுகையிலும், '' என் மக்கள் என்னோடு! '' என்ற இறுமாப்போடு நின்றான். அன்று முதல் இன்று வரை, அந்த உணர்வுதான் அவர்களது நெஞ்சுக்குள் குமுறுகின்றது.

எங்களிலிருந்து எட்டத்திலிருந்தாலும் '' என் மக்கள் என்னோடு! '' என்ற உணர்வு சுரக்க, தாங்கள் தனித்து விடப்பட்டவர்களல்ல என்ற நினைவோடுதான் - வலிகாமத்தின் குச்சொழுங்கைகளில் எம் தோழர்கள் இன்றும் நடந்துகொண்டிருக்கிறார்கள்!

**- தி. இனியவன்** ○

# நிதிநகரத் தாக்குதல்...

( 3 ஆம் பக்கத் தொடர்ச்சி )

திற்கு வந்துவிட்டது. 1994 பெப்ரவரியில் 1375.1 ஆக இருந்த மொத்த பங்கு விலைச் சுட்டெண் 1994 டிசெம்பரில் 986.7 ஆகவும், 1995 டிசெம்பரில் 661.2 ஆகவும் வீழ்ச்சியடைந்தது. 1996 ஜனவரி மாத முடிவில் 661.1 ஆக இது இருந்தது. எனவே, மொத்த பங்கு விலைச் சுட்டெண் மிகவும் தாழ்ந்த மட்டத்தினை அடைந்துவிட்டதனாலேயே குண்டுவெடிப்பின் பின்பும் மொத்தப் பங்கு விலைச் சுட்டெண் மாற்றமுறாமல் உறுதியாக இருந்தது. ஆனால் இக்குண்டு வெடிப்பின் காரணமாக கொழும்புப் பங்குச் சந்தையில் பங்குபற்றும் வெளிநாட்டவர்களின் பங்கு, சார்பளவில் குறைவடையலாம்; பங்குச் சந்தையின் புரள்வும் வீழ்ச்சியடையலாம்.

## வெளிநாட்டு முதலீடு

நிதிநகரத் தாக்குதல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் அச்சவுணர்வினை ஏற்படுத்தியுள்ளது. இதனாலேயே குண்டு வெடிப்பை அடுத்த சில தினங்களில், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அரசியலமைப்பின் ஊடாகப் பாதுகாப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பினை நீதி, அரசியலமைப்பு அமைச்சர் திரு. ஜி. எல். பீரிஸ் அவசரமாக மேற்கொண்டார். ஆனால் பாதிக்கப்படும் நிறுவனங்களுக்கு நட்டஈடு வழங்குவதைத் தவிர வேறு எந்தவொரு பாதுகாப்பினையும் அரசியலமைப்பின் ஊடாக வழங்க முடியாது. மாறாக, தமிழர் தாயகத்தினை ஏற்று, சிங்கள மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் தமிழ் மக்களும் அனுபவிக்கத்தக்க வகையில் அரசியலமைப்பு மாற்றப்படும்போது மட்டுமே, வெளிநாட்டு முதலீடுகளுக்கு தகுந்த பாதுகாப்பு ஏற்படும்; அல்லது தமிழீழம் உருவாகும்போது மட்டுமே சிறீலங்காவின் வெளிநாட்டு முதலீடுகள் பாதுகாக்கப்படும். ஏற்கெனவே தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளினால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலிடுவதற்குத் தயக்கம் காட்டிவருகின்றனர். இலங்கையில் ''கைத்தொழில் பயங்கரவாதம்'' ( Industrial Terrorism ) நிலவுவதாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தன்னிடம் முறையிட்டதாக, கைத்தொழில் அமைச்சர் திரு. சி. வி. குணரத்தின கூறியமை குறிப்பிடத்தக்கது. நிதிநகரத் தாக்குதல் இந்நிலைமையை மேலும் மோசமாக்கும். ஆசியாவின் புதிய முதலீட்டு மையம் என வர்ணிக்கப்பட்ட இலங்கை இன்று, 'கைத்தொழில் பயங்கரவாதம்' நிலவும் நாடு என வர்ணிக்கப்படுவது, இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கப்போகும் நெருக்கடிகளுக்குக் கட்டியம் கூறுகின்றது. நாட்டின் சேமிப்புக்கும் (உள்நாட்டு சேமிப்பு வீதம் - 15%) முதலீட்டிற்கும் (முதலீட்டு வீதம் - 27%) இடையிலான இடைவெளி, வெளிநாட்டு முதலீடுகள் மூலமே நிதிப்படுத்தப்படுகின்றது. நிதிநகரத் தாக்குதலினால் வெளிநாட்டு முதலீடுகள் பாதிக்கப்படும்போது நாட்டின் முதலீட்டு மட்டம் வீழ்ச்சியடையும்; நாட்டின் உற்பத்தி, வருமானம், வேலைவாய்ப்பு என்பனவற்றில் இது வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

## முடிவுரை

நிதிநகரத் தாக்குதல் காரணமாகச் சேதமடைந்த கட்டடத் தொகுதிகள், ஆவணங்கள், கணணிகள், வாகனங்கள் என்பவற்றின் பெறுமதிகளை மட்டும் கொண்டு இத்தாக்குதலின் முக்கியத்துவத்தினை மதிப்பிடக்கூடாது. கட்டடங்களை அழித்து அரசாங்கத்திற்கு செலவினை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் தாக்குதலை நடாத்தியோரின் நோக்கமாக இருந்திருக்க முடியாது. மாறாக, இலங்கைப் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதே தாக்குதலை நடாத்தியோரின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். கொழும்பின் இதயம் போன்ற பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தையே தாக்கிவிட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்களினதும் உல்லாசப் பிரயாணிகளினதும் நம்பிக்கையைப் பெறுவது என்பது, எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்திற்குக் கடினமானதாகவே இருக்கும். குண்டு வெடிப்புக்களினால் எழுந்த புகைமண்டலங்களின் ஊடாக இலங்கைப் பொருளாதாரம் செல்லத் தொடங்கிவிட்டதனால், தான் போகும் திசையறியாமல் பொருளாதாரம் நிலைகுலையப் போகின்றது. ஏற்கெனவே பிரமாண்டமான அளவில் விரிவடைந்த பாதுகாப்புச் செலவினால் மூச்சுத்திணறிக்கொண்டிருக்கும் அரசாங்கத்தினதும் இலங்கைப் பொருளாதாரத்தினதும் குரல்வளையை நசுக்குவதாக, நிதிநகரத் தாக்குதல் அமைந்துவிட்டது. இத்தகைய தாக்குதல்கள் மேலும் தொடருமேயானால், பொருளாதாரம் வீழ்ச்சியடைவது தவிர்க்கமுடியாததாகிவிடும்; இதனால், தமிழருக்கு எதிரான போரையும் தான் திட்டமிட்ட வகையில் அரசாங்கத்தினால் நடாத்த முடியாமல்போகும்! ○

## புதிய போருபாயம்



சிங்களப் படைகள் தமது பலத்தை வடக்கில் குவித்துவைத்திருக்க, புலிகள் தமது இராணுவச்செயற்பாடுகளைக் கிழக்கில் அதிகரித்துள்ளனர்.

வடக்கில், வலிகாம நிலம் படையினரால் ஆக்கிரமிக்கப்பட; கிழக்கில், படுவான்கரையின் பெரும்பகுதி நிலம் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டதுடன் - எஞ்சிய இராணுவ ஆக்கிரமிப்புப்பகுதியின் சிவில் நிருவாகமும் சீர்குலைக்கப்பட்டுள்ளது. அத்துடன், கோடிக்கணக்கான ரூபா பெறுமதி உள்ள அரச உடைமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றின் காரணமாக, அரச பொருளாதாரத்திலும் சிங்களப் படைகளின் செயற்பாட்டிலும் கணிசமான தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அரசின் சிவில் நிருவாகம் கிழக்கு மாகாணத்தில் முறையாக நடப்பதாக வெளிநாடுகளுக்குக் காட்ட, சிங்கள அரசு முயல்கின்றது; அதன்மூலம், போரால் பாதிக்கப்பட்ட கிழக்கின் அபிவிருத்திக்கு என்ற போர்வையில் பலநூறு கோடி ரூபாய்களைவெளிநாடுகளிடமிருந்துஉதவியாகப் பெற்று, அதை இராணுவதேவைக்கும்-சிங்களக் குடியேற்றங்களின் அபிவிருத்திக்கும் அரசு செலவிடுகின்றது.

கிழக்கில் சிவில் நிருவாகம் நடைபெறுகின்றது என்று அரசு கூறிக்கொண்டாலும் உண்மையில், அங்கே இராணுவ நிருவாகமே நடைபெறுகின்றது. மக்களின் தேவைக்காக அல்லாது, இராணுவத் தேவைகளைக் கருத்திற்கொண்டே நிருவாகம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மீன்பிடியாக இருந்தாலும் - விவசாயச் செய்கையாக இருந்தாலும் - வர்த்தகமாக இருந்தாலும் அதை இராணுவமே தீர்மானிக்கின்றது. எங்கே மீன்பிடிப்பது? எந்த நேரம் மீன்பிடிப்பது? விவசாயி தனது வயலிற்குச் செல்லலாமா செல்லக்கூடாதா? பிடித்த மீனை-விளைவித்த நெல்லைச் சந்தைப்படுத்தலாமா? அப்படியாயின் யாருக்கு? என்பதை எல்லாம் இராணுவமே தீர்மானிக்கின்றது.

சுருக்கமாகச் சொன்னால், போராட்டத்தை ஒடுக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இராணுவ நிருவாகம் நடைபெறுகின்றது. இந்த இராணுவ நிருவாகத்திற்கு மின்சாரம் பக்கபலமாக இருந்து துணை புரிகின்றது. சிவிலியன்களுக்கான தொலைதொடர்புச் சேவையும புகையிரதச் சேவையும் இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மூன்றுடனும் மக்கள் சம்பந்தப்பட்டிருந்தாலும்-இவற்றால மக்கள் ஓரளவு பயன்களைப் பெற்றுவந்தாலும் - பெரும்பாலும் இராணுவத் தேவையையே இம்மூன்றும் நிறைவேற்றி வருகின்றன.

எனவேதான், மின்சாரமும் தொலைதொடர்பு நிலையங்களும் புகையிரத மார்க்கமும் போராட்டத்தின் இராணுவ இலக்குகளாகின.

இதுவரை 300இற்கும்மேற்பட்ட மின்மாற்றிகளும் - சில தொலைதொடர்பு நிலைகளும் அழிக்கப்பட்டுள்ளன; இதனால், படையினரின் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைக்கு, இரவு துணைசெய்யாது விடுகின்றது. அத்துடன், எதிரிக்குத் தகவல் கொடுப்போரது செயற்பாடுகளும்- எதிரிப் படைகளின் செய்திப் பரிவர்த்தனையும் சிரமத்திற்கு உள்ளாகின்றன. புகையிரத சேவையும் சீர்குலைக்கப்பட்டுள்ளது; இதனால் அரசின் இராணுவ நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன அல்லது வேகம் பெற முடியாது முடக்கமடைகின்றன. ஆனால் மறுபுறத்தில், புலிகளின் இராணுவச் செயற்பாடுகள் சுலபமடைவதுடன் - வேகமும் பெறுகின்றன.

கிழக்கு மாகாணத்தின் '' சிவில்'' நிருவாகம் சீர்குலைக்கப்பட்டால், வெளிநாடுகளிடமிருந்து பணஉதவிகளை அரசால் பெறமுடியாதுபோகும். இது அரசின் போருக்கான பொருளாதாரத்தில் சில நெருக்கடிகளைக்கொண்டுவரும்; அத்துடன், சிங்களக் குடியேற்றங்களின் அபிவிருத்தியும் பாதிக்கப்படும். மின்சாரமின்மை காரணமாக சிங்களக் குடியேற்றங்கள் இருளில் மூழ்கும்; இது குடியேறிகளுக்கு அச்சத்தை ஊட்டும்; குடியேறிகளினதும் - குடியேற வருவோரினதும் உற்சாகத்தைக் குன்றச்செய்யும். இதனால், அரசு மேற்கொள்ளும் நில அபகரிப்பை நாம் ஓரளவாவது தடுக்கமுடியும்.

சேதமாக்கப்பட்ட அல்லது முற்றாக அழிக்கப்பட்ட மின்மாற்றிகள்- தொலை தொடர்பு நிலைகள், புகையிரத வண்டிகள் என்பவற்றின் பெறுமதி 400 கோடி ரூபாய்களைத் தாண்டும் என்று இயந்திரவியலாளர்கள் கூறுகின்றனர். இந்த முதலீட்டை வைத்துக்கொண்டு அரசு பெற்ற வருமானம் ஆண்டுக்கு சில நூறு கோடி ரூபாவாக இருக்கும் எனவே, இந்த அரச உடைமைகள் அழிக்கப்பட்டதால் அரசுக்குப் பெரியதொரு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் நிராகரிக்க முடியாது.

கொலன்னாவ எண்ணெய்க் குதங்கள் தீயில் அழிந்துபோனதால் அரசுக்கு ஏற்ட்ட பொருளாதார இழப்பு சாதாரணமானதல்ல.

அரச உடைமைகளின் அழிப்புக்களும்-சிவில் நிருவாகச் சீர்குலைப்புக்களும் அரசிற்குப் பொருளாதார அழுத்தங்களை உண்டுபண்ணும்; இது அரசின் போர் முயற்சிகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, விடுதலைப் போராட்டத்திற்கு இந்தவகைத் தாக்குதல்கள் பெரிதும் உதவுகின்றன. அரச உடைமைகளை அழித்து - அரசின் நிருவாகத்தைச் சீர்குலைப்பது, விடுதலைப் போரின் ஒரு தந்திரோபாயமாகும். எமது நிலத்தில் எதிரிக்கு எந்த வேலையும் இல்லை; உடனடியாக வெளியேறு என்பதுதான், இந்தவகைத் தாக்குதல்கள் வழங்கும் அரசியல் செய்தியாகும். ○

## சந்திரிகா அரசின் தீர்வுத்திட்டம்




ஜேர்மனி தோல்வியை ஏற்றுக்கொண்டதுடன் முதலாம் உலகப்போர் முடிவை எட்டியது. ஆனாலும், போரில் வென்ற நாடுகள், ஜேர்மனியைச் சும்மா விட்டுவிடத் தயாராக இருக்கவில்லை. தோற்றபின்னரும ஜேர்மனிக்குப் பாடம் புகட்டவே அவை விரும்பின. பிரான்சின் 'வேர்சேல்' நகரில், வென்ற நாடுகளின் பிரதிநிதிகள் கூடினர். போருக்கெனத் தமது நாடுகள் செலவிட்ட பணத்தை ஜேர்மனிதான் தவணை முறையில் செலுத்தவேண்டும் எனத் தீர்மானம் எடுத்தன. வருடாவருடம் 'பல்லாயிரம் கோடி' மாாக்குகளை ( ஜேர்மனிய நாணயம் ) போரில் தன்னை வென்ற நாடுகளுக்குநஷ்டஈடாகக் கட்டும்படி ஜேர்மனி கேட்கப்பட்டது. அதுமட்டுமலல, இவ்வளவு ஆயுதங்களை - இவ்வளவு ஆட்களை மட்டுமதான் படையில வைததிருக்கலாம் என்று ஜேர்மனிகுச் சட்டம் போடபபட்டது; வாயை மூடிக்கொண்டு ஜேர்மனியும் இவற்றிற்கு உடன்பட்டது. இந்த உடன்படிக்கை வேர்சேல் ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகின்றது.

இது அரசியல் ஒப்பந்தமல்ல, மாறாக ஒரு அடிமைச் சாசனம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவர். போரில் தோற்கடித்துவிட்டு அல்லது பலத்தைக்காட்டிப் பயமுறுத்தி, தீர்வுகளை அல்லது நிபந்தனைகளைத் திணிக்கமுயலும் அரசியல் ஒப்பந்தங்கள் இந்தவகையைச் சார்ந்தவை.

சந்திரிகா அம்மையாரும் 'வேர்சேல் ஒப்பந்தம்'போன்ற ஒன்றை தமிழினத்துடன் செய்துகொள்ள விரும்புகின்றார் என்பது, தெளிவாகத் தெரிகின்றது வலிகாமம் நிலத்தை ஆக்கிரமித்துவிட்டு - அதை ஒரு பணயப் பொருளைப்போல பாவித்துக்கொண்டு - தமிழரின் தேசியத் தனித்துவத்திற்கு விலங்கிடமுனையும் ஒரு சூழ்ச்சிகரத் திட்டத்தை, அரசியற் தீர்வுத்திட்டம் என்ற பெயருடன் நடைமுறைப்படுத்த விரும்புகின்றார்.

இந்த அரசியற் தீர்வுத்திட்டத்தை புலிகள் ஏற்றாலும் சரி ஏற்காது விட்டாலும் சரி, எல்லாம் ஒன்றுதான் என்ற அகங்கார உணர்வுடன் சந்திரிகா அம்மையார் உள்ளார். ஏற்றால், தமிழீழ தேசியம் தூக்குக்கயிற்றில் தொங்கும்; ஏற்காதுவிட்டால், புலிகளுக்கு அரசியற்தீர்வில் நாட்டமில்லை என்று உலகிற்குக் காட்டிவிட்டு, சமாதானத்திற்கான இரண்டாவது போர் என்று பெயரிட்டு, மீண்டும் தமிழின அழிப்பைத் தொடரலாம் என்று அரசு எண்ணுகின்றது.

## செய்தி நயம்

நீண்டகாலமாக நிலவிவரும் அரசியல் பிணக்குகளிற்கான தீர்வுகள் ஏறுவரிசைப்படி - ஒரு வளர்ச்சியை நோக்கிச் செல்வதே உலக வழமை.

ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் உரிமைகள் அதிகரிக்கப்பட்டு அல்லது அரசியல் அமைப்பால் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு, தீர்வுத்திட்டங்கள் பரிணாம வளர்ச்சி அடைவதே வரலாற்று இயல்பாகும்.

ஆனால், சந்திரிகா அரசு இப்போது வெளியிட்டுள்ள தீர்வுத்திட்டம் வரலாற்று நியதிக்கு முரணாக - வரலாற்றைப் பழிப்பதாக இருக்கின்றது. புலிகளுக்கு எதிராகப் போரிட்ட இந்தியப் படைத்தளபதி லெப். ஜெனரல் கல்கட் அவர்கள், சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தில் உள்ள அம்சங்களைக் கண்டன விமர்சனத்திற்குள்ளாக்கியுள்ளார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளதைவிடக் குறைந்தளவு உரிமைகளே இந்தத் தீர்வுத்திட்டத்தில் உள்ளன என, அவர் சந்திரிகா அம்மையாரைக் குறைகூறியுள்ளார். அத்துடன், இதைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளாது; அப்படி ஏற்றுக்கொண்டால் புலிகளை தமிழ் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்றும், அரசியல் தீர்க்கதரிசனம் கூறியுள்ளார்.

வலிகாமச் சமரில் சிங்களப் படைகள் பெற்ற வெற்றியால், சந்திரிகா அம்மையாரின் ஆழ்மனதில் புரையோடிப்போய்க் கிடந்தபேரினவாத வெறி, அரசியற் தீர்வுத்திட்டம் என்ற வடிவுடன் வெளிவந்துள்ளது என்பதே சரியான மதிப்பீடாக இருக்கும். இந்தத் தீர்வுத்திட்டத்தை, தனது குப்பைத் தொட்டிக்குள்தான் வரலாறு உள்வாங்கிக்கொள்ளும். அத்துடன், 'வேர்சேல் உடன்படிக்கை'யை ஒத்த இந்த அடிமைச் சாசனத்தை ஏற்று தமிழினத்திற்கு வரலாற்றுத் துரோகமிழைகக, புலிகள் இயக்கமும் விரும்பமாட்டாது! ○

## துரோகத்தின் பரிசு

*கொழும்பில் இருந்து வெளிவரும் மாதாந்த ஆங்கில சஞ்சிகையான லங்கா மந்திலி டைஜஸ்ட் ( Lanka monthly digest ) 'கடந்த வருடத்தின் சிறந்த மனிதனாக' சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களைத் தெரிவுசெய்து கௌரவித்துள்ளது இத் தெரிவிற்கு பின்வரும் காரணம் கூறப்பட்டுள்ளது. ''தாமே தமிழர்களின் பிரதிநிதிகள் என புலிகளால் உருவாக்கப்பட்ட ஐதீகத்தை ( myth) ( அதாவது கருத்தை) கதிர்காமர் உடைத்தெறிந்துள்ளார்'' என்பதே அதுவாகும்.*

*புலிகள் இயக்கம் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகள் அல்ல என்று வெளி உலகிற்கு கதிர்காமர் எவ்விதம் நிரூபித்தார் எனத் தெரியவில்லை. சிங்கள அரசின் ஒரு அமைச்சர் அதுவும் தமிழினத்திற்கு எதிரான போரை நியாயப்படுத்திப் பிரச்சாரம் செய்யும் அரசுசார்பு அமைச்சர் - தமிழரின் விடுதலைப் போரை முன்னின்று நடாத்தும் புலிகள் இயக்கத்தின் தேசிய பாத்திரத்தை எவ்வாறு உடைத்தெறிந்திருக்க முடியும்? கதிர்காமரைப் பாராட்டுவதற்கு அந்தச் சஞ்சிகை கொடுத்திருந்த காரணம் உண்மையில் பரிகாசத்திற்கு உரியது. இத்தகைய கற்பிதத்தை உருவாக்க முயன்றதற்காக, 'ஐதீகத்தை உருவாக்கும் சிறந்த சஞ்சிகை' என்ற பாராட்டை 'லங்கா மந்திலி டைஜஸ்ட்'டிற்கு வழங்கிக் கௌரவிக்கலாம் போலுள்ளது!*

*சந்திரிகா அரசின் வெளிவிவகார அமைச்சர் பதவியை திருவாளர் கதிர்காமர் அவர்கள் திறம்பட ஆற்றிவருகின்றார் என்பதை மறுப்பதற்கில்லை. தமிழர்கள்மீது சிங்களஅரசு மேற்கொள்ளும் அடக்கு*

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சன் சூவும் மாவோவும் மார்க் செனிவிரத்னாவும்

சிறீலங்கா விமானப்படையில் ஓய்வுபெற்ற விங் கொமாண்டரான மார்க் செனிவிரத்னா, ஒரு வித்தியாசமான அரசியல் - இராணுவக் கட்டுரையாளர். நீண்ட காலமாகவே அவர், விடுதலைப் புலிகள் பற்றிய இராணுவ - அரசியல் ஆய்வுகளை, சிங்கள அரசியல்-இராணுவத்தலைமைக்கு அறிவுரை, ஆலோசனை கூறும் வகையில் எழுதிவருபவர். இதற்காக அவர் மாவோ, சே போன்றோரின் ஆக்கங்களை - அனுபவங்களை ஆதாரமாக வைத்து விடுதலைப் போராட்டம், போராளிகள் கரந்துறை போர் போன்றவை பற்றி சற்று ஆழமாகவே அதேவேளை சிங்கள மேலாதிக்கத்தைக் காப்பாற்றும் வகையில் - கட்டுரை வரைவார். இந்த அடிப்படையிலே அமைந்த அவரது நீண்ட கட்டுரையொன்று அண்மையில் ஐலண்ட் செய்தியேட்டில், 'அது ஒரு புகழ்மிக்க வெற்றிதான்; ஆனால் இப்போது?' என்கிற தலைப்பில் வெளியாகிவந்தது. என்ன சொல்ல வருகின்றார் அவர் என்பது எம்மால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகின்றது. யாழ்ப்பாணக் கைப்பற்றுதலின் பின்னர் சிங்கள தரப்பு இனி எனன செய்ய வேண்டும்? அதன் முன்னாலுள்ள தெரிவுகள் எவை என்பவற்றைத் தொகுத்து, தமிழ்த் தேசியச் சிக்கல் என்றொன்று இல்லாமல் போக என்ன செய்யப்பட வேண்டும் என, வ்சித்திரமான தனது எண்ணமொன்றையும் வெளிக்காட்டி வைக்கின்றார் மார்க் செனிவிரத்னா.

இதுவரை மாவோ, சேயை மேற்கோள் காட்டியவர் இம்முறை, கி. மு. 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சினப் போரியல் வல்லுநரான சன் சூவின் ( Sun - Tzu ), தொன்மையும் புகழும் மிக்க போர்க்கலை எனும் போரியல் நூலிலிருந்து மேற்கோள் ஒன்றைத் தனது கட்டுரைக்கு ஆதாரமாகக் கொள்கின்றார். யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டமை தொடர்பான கொண்டாட்டங்களிலேமறைமுகமான இனவாதம் புதைந்து இருப்பதாகக் கூறும் அவர், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது இராணுவ நடவடிக்கையின் கொடுமைகள், பாவங்கள் வெளிவராமல் போவதற்காகவே தணிக்கை முறை கொண்டு வரப்பட்டது என்பதையும் ஒத்துக் கொள்கின்றார். இதன் பின்னே முக்கிய விடயத்திற்கு வருகின்றார். யாழ்ப்பாணத்தில் இப்போது மட்டும் கொடியேற்றங்கள் நடக்கவில்லை. பாண்டியர், விசயநகரத்தார், போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எல்லாரும்தான் கொடியேற்றினார்கள். எனவே, அடுத்தது என்ன? இனி என்ன என்பதே இவரது வினாவாகும்; அதற்கான பதிலையும் அவரே தருகின்றார்.

யாழ்ப்பாண வெற்றி தந்த மிதப்பில் சிங்கள இராணுவம், சம்பிரதாய போர்முறையைப் பயன்படுத்தி வன்னியில் பாரிய இராணுவ நடவடிக்கைகட்கு முயலக் கூடும். அதேவேளை, தமது இயல்பான திறமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப தமது போர் நடவடிக்கைகளை புலிகளும் மேற்கொள்வர் என்று கூறும் அவர், இத்தகைய போர் நடவடிக்கையை சிங்கள இராணுவம் தொடர்ந்து மேறகொள்வதை தான் ஆதரிக்காமைக்குப் பல காரணங்களைக் காட்டியிருக்கின்றார். இத்தகைய நீளும் போர்களின் மிக மோசமான - பாரதூரமான விளைவுகளை முழு நாடுமே எதிர்கொள்ள நேரிடும் என, கடுமையாக எச்சரிக்கின்றார். அவரின் வார்த்தையில் கூறுவதானால், ''இத்தகைய போரானது நீண்ட காலத்திற்கு தொடரப்போவதால், இதனுடைய பொருண்மியச் செலவை சிங்களத்தால் ஒருபோதும் தாங்க முடியாது; மிகப் பெருமளவில் உயிர், பொருள் இழப்புக்கள் ஏற்படும்; மோசமான இயற்கை, சூழல் அழிவுகள் ஏற்படும்; மிக அவலமான - துன்பகரமான - பெருமளவிலான மக்கள் இடப்பெயர்வுகளும் குடும்பப் பிரிவுகளும் ஏற்படும் எல்லாவற்றிற்கும் மேலாக, இதுவரை இந்நாடு சந்தித்திருக்காத மிக ஆழமான - தாக்கமான உளவியல் உணர்வலைகளை நாடு முழுவதுமே ஏற்படுத்திவிடும்.'' ('-and to possibly create a hitherto unknown emotional psyche among the people all over the island.')

எனவே, இத்தகைய இராணுவ நடவடிக்கைத் தெரிவினை விடுத்து, இன்னொரு தெரிவினையே அரசு கடைப்பிடிக்க வேண்டும் கடைப்பிடிக்கும் என அவர் நம்பிக்கை தெரிவிக்கின்றார் அதாவது புலிகள் மக்களில் தங்கியிருக்கின்றார்கள்; மக்கள் புலிகளை நம்பியிருக்கின்றார்கள். இதுவே உண்மை யதார்த்தம். எனவே, இதனையே முறியடிக்க வேண்டும் எனக் கூறும் மார்க், இங்கேதான், சன் சூவின் மேற்கோள் ஒன்றை இரவல் வாங்குகின்றார். புலிகளை வெல்வதானால் சன் சூ சொன்னார், ''முதலில் எதிரியின் மூலோபாயத்தை தாக்கியழி ( அதாவது புலிகளின் மக்கள் ஆதரவை இல்லாதொழி ). அடுத்து எதிரியினது நேசசக்திகளை, ஆதரவுத் தளங்களை சிர்குலை (அதாவது புலிகளின் வெளிநாட்டு ஆதரவு )'' என்று அரசுக்கு ஆலோசனை கூறும் அவர், முதலாவது செய்ய வேண்டியது அரசியல் ரீதியான ஒடுக்குமுறைகளை நீக்கல், வலிகாம மறுசீரமைப்பு என்று தற்போது சிங்கள அரசு கடைப்பிடிக்கும் அதே உத்தியைத்தான் சுட்டிக் காட்டுகின்றார். அதாவது, புலிகளுக்கும் மக்களுக்குமிடையே முரண்பாட்டினை உருவாக்கி, புலிகளைத் தனிமைப்படுத்தி இறுதியில் ஒழித்து விடலாம் என்பதே, இதன இலக்காகும். சிங்களத்திற்கும் தமிழீழத்திற்கும் இடையே இனச்சிக்கல் என்னும் எந்த முதன்மையான - கூர்மையடைந்த முரண்பாடு காரணமாக வரலாற்றின் இயங்கியல் நியதிப்படி விடுதலைப் புலிகள் எனும் பெரு விடுதலை விருட்சம் தோன்றியதோ, அதே முரண்பாட்டினைப் பயன்படுத்தி, வெற்று அரசியல் சுலோகங்களாலும் அரைகுறை அபாயகர அரசியல் தீர்வுப் பொதிகளாலும் புனருத்தாரண மாயைகளாலும் விடுதலை விருட்சத்தை வெட்டி வீழ்த்தலாம் என்கிற அதிவிசித்திர ஆபத்தான அறிவுரை இது. வரலாற்றின் வளர்ச்சிப் போக்கிற்கு, மனித குல விடுதலைக்கு, பேன்.. மக்கு அடிப்படையாக அமையும் முரணிய கோட்பாட்டை செவ்வனே விளக்கியவரும், அதனைச் செம்மையாகக் கையாண்டு மாபெரும் புரட்சியொன்றையே நடத்திக் காட்டியவருமான மாவோ இதையறிந்தால் - உயிரோடு இருந்தால் வெட்கத்தல் தலை குனிந்திருப்பார். வரலாற்றின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல இயற்கையின் அனைத்துக் கூறுகளிலும் - எங்கும் பரந்து நிரம்பி, அதன் வளர்ச்சிக்கும் காரணமாகும். முரண்பாட்டு கோட்பாட்டினை, வரலாற்றினைப் பின்தள்ள - தமிழனை அடிமைத்தனத்திற்கும் அவலத்திற்கும் அழிவுக்கும் தள்ள சிங்களம் பயன்படுத்த நினைக்கும் முட்டாள்தனத்திற்கு முடிவேது?

இதேவேளை, இந்தத் தெரிவினையும் தகுந்த முறையில் செயற்படுத்த முடியாத நிலையில், வடக்கு - கிழக்கு தமிழரை தெற்கிலும் தெற்குச் சிங்களவரை வடக்கிலும் கிழக்கிலும் கட்டாயமாகக் குடியேற்றி, தமிழர் தாயகக் கோட்பாட்டையே தகர்க்கச் செய்ய வேண்டும் என்கிற ஆற்றாமையோடுகூடிய இன்னொரு தெரிவையும் முன்வைக்கும் மார்க் செனிவிரத்னாவின் அபத்தமான கருத்தை விட்டு, இப்போது எமது பக்கம் திரும்பலாம். இங்கேதான் எம்மக்கள் மனங்கொள்ள வேண்டிய மிக முக்கிய வரலாற்றுண்மை, புலிகளின் புரட்சிக் குரலாக ஒலிக்கின்றது. யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின்னரும் முன்னைவிட உறுதியோடு எவ்வாறு புலிகள் செயற்படுகின்றார்கள்? கனவிலும் கண்டிருக்க முடியாத பாரிய இடப்பெயர்வின் பின் - 5 இலட்சம் மக்கள் அனைத்தையும் இழந்த பின் எவ்வாறு அடுத்த நாளை நம்பிக்கையோடு எதிர்கொள்கின்றார்கள்? ''யாழ்ப்பாணச் சமர் என்பது எமக்கு ஏற்பட்ட பின்னடைவே தவிர தோல்வியல்ல; அதுவுமொரு தற்காலிக பின்னடைவுதான். இதைவிடப் பெரிய பின்னடைவுகளை முன்னர் நாம் சந்தித்து இருக்கின்றோம். எனவே, ''இன்றைய பின்னடைவே நாளைய வெற்றி'' என தலைவர் அவர்களால் எவ்வாறு உறுதியாகக் கூறமுடிந்தது? இத்தகைய வினாக்களுக்கு எல்லாம் விடை மிகத் தெளிவானது.

**வே. பாலகுமாரன்**

மாவோவின் சொந்த வார்த்தைகளிலேயே இதற்கான விடையைக் கூற முடியும். மாவோ கூறுகின்றார்: ''வரலாறு என்பது சமூக மாற்றத்தை நிகழ்த்திச் செல்லும் சக்தி. இதன் இயக்கத்திற்கு அடிப்படையான இயங்கு விதியே முரண்பாடாகும். இம் முரண்பாடு பலவகைப்படும் எனினும், நதிகள் கடலில் சங்கமிப்பது போல, அனைத்து முரண்பாடுகளும் முதன்மை முரண்பாட்டினைச் சந்திக்கின்றன; அதற்குத் துணையாகின்றன. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் முரண்பாடு, பல் முரண்பட்ட எதிர்நிலைகளில் இயங்கும் பல்வேறு எதிர்வுச் சக்திகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து முரண்பட்டு இயங்கி வரலாற்றினை முன்தள்ளும்.'' மாவோவின் இவ்விதியே இன்று எமது போராட்டத்திலும் நிகழ்கின்றது. எமக்கிடையிலுள்ள பல இரண்டாம்தர முரண்பாடுகள் யாவுமே மறக்கட்பட்டு இன்று, எமது தேசியச் சிக்கல் என்கிற பிரதான முரண்பாட்டையே தீர்க்கவேண்டிய நிலைக்கு தமிழீழம் தள்ளப்பட்டுவிட்டது. எம்மக்கள், எமது வாழ்வின் ஏற்ற இறக்கங்கள் இயல்பானவை என இப்போது உணரத் தலைப்படுகின்றனர். இதையே மாவோ, ' ஒரு வெடிகுண்டானது வெடிப்பதற்கு முன், குறிப்பிட்ட நிலைமைகளில், எதிரானவை யாவும் அதனுள்ளே ஒன்றாக இருக்கின்றன. ஒரு புதிய நிலைமை ஏற்பட்டவுடன் ( தீ பற்றியபின் ) அது வெடிக்கின்றது. அதாவது தனது பழைய முரண்பாட்டினைத் தீர்த்து புதிய வடிவம் எடுக்கின்றது'' என்கிறார். எமது விடுதலைப் போரிலும் பல்வேறு முரண்பாடுகளை - கருத்துநிலைகளை ( இதற்கும் மக்களின் உள் முரண்பாடுகளே காரணம் ) கொண்டிருந்த எம்மக்கள், முழு அளவிலான போர் என்கிற புதிய நிலைமை ஏற்பட்ட போது, வெடிகுண்டு வெடிப்பது போன்ற இடப்பெயர்வின்மூலம் ஒரு புதிய நிலைமையை உருவாக்கினர். எனவேதான் இப்போது, மக்களும் இயக்கமுமாக ஒரு புதிய போக்கிற்கு - ஒரு புத்தாக்கத்திறகு தம்மை உட்படுத்தத் தொடங்குகின்றனர்.

மேலும் எம்மக்கள் தெளிவாக இருக்க வேண்டுமென்பதற்காக மாவோ தொடர்ந்து சொல்கின்றார், ''போரும் சமாதானமும் தாமாகவே ஒன்றையொன்று மாற்றிக் கொள்கின்றன. முரண்பட்டவை அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவை. ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒன்றாக சகவாழ்வு நடத்துபவை, வேறு ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒன்று மற்றொன்றாக மாற்றிக்கொள்கின்றன.'' இதனையே எமது தலைவரும் எளிமையான வார்த்தைகளால், இன்றைய பின்னடைவு நாளைய வெற்றி என்கிறார்.

இதேவேளை, போரியல் அறிஞர் சன் சூ என்ன சொல்கின்றார்? 'தாக்குதல்களுக்கான தந்திரங்கள்' என்கிற தனது அத்தியாயத்திலே, ''பகைவனை அறிந்துகொள் - உன்னையும் அறிந்துகொள். தோல்வி பற்றிய கவலையே இல்லாமல் நூறு போர்களை நடத்தமுடியும்'' என்கிறார். நீரானது தான் பாய்ந்து செல்லும் நிலத்தின் தன்மைக்கேற்ப தனது பாதையை அமைத்துக்கொள்கின்றது; தான் எதிர்கொள்ளும் எதிரிக்கேற்ப தனது வெற்றியை படைவீரன் தீர்மானிக்கின்றான். இது புலிகளுக்கு கைவந்த கலையென்பது முழு உலகிற்குமே தெரிந்த உண்மையல்லவா? இப்போது இன்னொரு உண்மையையும் நெற்றிப் பொட்டில் அடித்தாற்போல் எம்மக்கள் முழு உலகத்திற்குமே முரசறைவித்துவிட்டனர். கொழும்பு ஆங்கிலச் செய்தி விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டதுபோல், எமது மக்கள் தாம் யார் பக்கம் என்பதைக் கைகளால் புள்ளடி போட்டுக் காட்டவில்லை; தமது கால்களாலல்லவா வாக்குப்போட்டுக் காண்பித்து விட்டார்கள்!

இறுதியாக ஒரு வரி. சிங்கள அரசானது முரண்பாடுகளை மூடத்தனமாகக் கையாண்டு, சிங்கள மக்கள்மேல் பாரிய பொருண்மியச் சுமையைச் சுமத்துவதால், தமக்கும் சிங்கள அரசுக்கும் இடையிலான பொருண்மிய முரண்பாட்டினைத் தீர்க்கவேண்டிய முறை இப்போது சிங்களவர்க்கு ஏற்படுகின்றது. எனவே, சிங்கள அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை எவ்விதம் தீர்க்கலாம் என்பது பற்றி இனி, மார்க் செனிவிரத்னா சந்திரிகா அம்மையாருக்கு அறிவுரை கூறுவதே நல்லதல்லவா?

# சும்மா இருக்கச் சுதந்திரமென்றால்... எனக்கும் அதிலே இரண்டுகிலோ!

விரல்மடித்துக் கணக்கெடுக்க முன்னரே
காலம் காற்றாய்ப் பறந்து விடுகிறது.
வலிகாமத்தை வழித்துத் துடைத்த பின்
தொண்ணூறு நாட்கள் தொலைந்து விட்டன.
நிகழ்வுமட்டும் நேற்றுப் போலிருக்கிறது.
30-10-95 ஒக்ரோபர் திங்கட்கிழமை
இந்தநாளிலும்,
இதன்பிறகு வந்த நாட்களிலும்
ஈழத்தமிழன் சுமந்த பாரச்சிலுவைக்கு
எதிர்காலம் என்னபேரிட்டு அழைக்குமோ?
கூரையற்ற குட்டிச்சுவராய்,
மழைநனைந்தும்,
வெயிலுலர்ந்தும்,
பசிசுமந்தும்
தமிழர்பட்ட துயருக்கு எது உவமையாகும்?
வதையின் கதைகளிலே... இதுவே பெருங்கதை.
வலிகாமம் வெளியேறத் தயாரானபோது
ஓரிரவும்,
ஒற்றைப்பாதையுமே இருந்தது.
அடிதலை தெரியாத அநுமான் வாலாக
நீண்ட நெடுந்தொலைவுககு மனிதவரிசை.
இருகாலுக்குமிடையே வெளியற்ற நகர்வு.
முன்னால் விழுந்துவெடித்தன எறிகணைகள்.
பின்னால்... துரத்திவந்தன பிசாசுகள்.
பீடுறவாழ்ந்த பெருங்குலம்
கூடுகலைந்து ஓடியது.
உன்னோடு ஒன்றான வாழ்வினி இல்லையென
தென்னிலங்கைக்குச் சொல்லிவைத்ததுபோல
வலிகாமம் முழுமையாக வெளியேறியது.
செம்மணி திணறியது.
நரபாரத்தால் நாவற்குழி நசிந்தது.
உள்ளே நுழைந்து பார்த்ததும்
சிங்களம் திகைத்துப் போனது.
சூனியத்திற் கொடியேற்றிப் போன
ரத்வத்தவுக்கு ராஜமரியாதை.
சந்திரிகாவுக்கு இந்திரப் பதவிக்குரிய பவிசு.
இனியென்ன?
வலிகாமத்தைப் புலிகள் பிடிப்பது எப்போது?
பலகாலமாகுமா?
இதுவே எங்கும் எதிரொலிக்கிறது.
பதிலென்ன?
வேரோடிய வாழ்வுக்குரிய ஒரு பரம்பரை
தூக்கி வெளியே வீசப்படும்போது
அந்தரித்துப்போகும் அவலத்தில்
ஆயிரம் கேள்விகள் அஸ்திரங்களாகும்.
கோபத்திற் காயும்.
அது குற்றமல்ல...
இந்திரவாழ்விழந்த அந்தர நிலையில்
அகப்பட்டதைத் தூக்கிமிதிக்கும் ஆனைபோல்
நெருப்புமுட்டிய வார்த்தைகளை நெஞ்சிலெறியும்.
ஆத்திரப்படல் ஆகாது.
தாங்கிக்கொள்வதே தாய்மனம்.
''வலிகாமத்தைக் காப்பாற்ற வக்கற்றதுகள்
வன்னிக்கு வரட்டாம்''
ஊரிழந்த கோபத்தின் உச்சம் இது.
சொல்லியிருக்கக்கூடாத சுடுவார்த்தைதான்.
விடுதலையின் பேரால்
இந்தச் சொற்கள் மட்டும் செவிவிழாதெனக்
காதடைத்துப்போகக் கடவது.
புலிகள்மீது ஏனிந்தக் கோபம்?
எதிரிகள்போல ஏனிந்தப் பார்வை?
ஊரிழந்துபோனது எங்களுக்குமட்டுமா வருத்தம்?
வலிகாமம் போன வருத்தத்தில்
தூங்காத வேங்கைகளே அதிகமென அறிக.
அன்று
கண்ணீர் வழிய நடந்தவர் கையில்
காணியுறுதியாவது இருந்தது.
பலர் இயலக்கூடியதை எடுத்துவந்தோம்.
ஆனால் ..
துயிலுமில்லத்தைத் தூக்கிவரமுடியவில்லையே என்று
துயரத்தில் துடித்தனர் போராளிகள்.
''தமிழரின் படைபலமே தாயகம் காக்கு''மென
எத்தனை தடவைகள் இடித்துரைத்தும்
எவர்தான் கருத்திலெடுத்தோம்.
போராட்டம் பூப்பறிக்கும் வேலையென்றே
காலாட்டிக் கொண்டிருந்தோம்.
எல்லோரும் சேர்ந்து எடுக்கும் பெரும்சுமையை
ஓரிரண்டு தோள்களில் எப்படிச் சுமத்தலாம்?
என்குடும்பத்தில் எவரும் குறையாது
கொண்டுவா விடுதலையென்பது குற்றமல்லவா?
அடுத்த தலைமுறைக்கான ஆனந்தவாழ்வு சமைத்தல்
இந்தத் தலைமுறைக்குக் கிடைத்த பேறென
எத்தனைபேர் உணர்ந்தோம்?
இத்தனைக்குப் பின்னும்;
இளையதலைமுறை என்னசெய்துகொண்டிருக்கிறது?
சுரணையற்றுத்தானே தூங்கிக் கிடக்கிறது.
காலையில் அண்ணா பற்பொடியையும்,
மாலையில் அடுத்தவீட்டு வேலியையும்
தின்றுகொண்டிருந்தால்...
வந்தபகையைத் துரத்துவது எப்படி?
வலிகாமத்துக்குப் போவது எப்படி?
ஊர்போவது எப்போது என்று
ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலிக்கட்டும்.
கேள்விக்குப் பதிலை வெளியில் கேட்பதை விடுத்து
முதலில் வீட்டிலேயே கேட்போம்.
தோளுக்குயர்ந்த சொந்தங்களைக் கேட்போம்.
படுக்கையிற் கிடக்கும் பிள்ளையைத்தட்டி
பதிலை அவர்களிடம் கேட்போம்.




- வியாசன்

அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்து
அலைகின்ற இளையதலைமுறையிடம் கேட்போம்.
நரம்பில்லாத நாவினால் ..
இதற்குள் எத்தனை எடுத்தெறிவுகள்.
காட்டிக் கொடுக்கிறது ''கூட்டணி''
எவரும் கண்டிக்கவில்லை.
நீலன் திருச்செல்வம் மோசம் செய்கின்றான்;
எல்லோரும் பேசாமற்தானே கிடக்கின்றோம்?
புலிகள் போராடுகின்றனர்.
காய்த்த மரத்துக்குத்தானா கல்லெறி?
தாயகத்தை நெஞ்சிற் சுமந்து
கல்லறைக்குப் போகும் செல்வங்களுக்கா
இந்த வசை?
சும்மா இருக்கச் சுதந்திரமென்றால்
எனக்கும் அதிலே இரண்டு கிலோ!
வெட்கம்கெட்டது இந்த விடுதலையுணர்வு.
நானென்ன,
பிள்ளையென்ன,
நாளைவரும் பேரனென்ன
எல்லோரும் போராடினால் இலக்கு எட்டும்.
விடுதலைப்புலிகளென்பது தமிழன் வீரத்தின் குறியீடு.
பிரபாகரன் என்பது தமிழர்மானத்தின் அடையாளம்.
பின்னடைவைப் பெருந்தோல்வியென்றால்
கண்டதையும்தான் கதைக்கவேண்டிவரும்.
நம்பிக்கையே வாழ்வு.
இனிவரும் நாட்கள் எமக்காகவே விடியும்.
படைபலமே முழுபலம்.
நம்பி எழுவோம்.
கற்றுத் தெளிந்தோம்.
களம்நோக்கி நடைபயில்வோம்.
வெற்றுக்கதை விடுத்து விடுதலைக்கு விலைகொடுப்போம்.
புலிகளே பலம்.
வருவதோ ஜெயம்! O

# போர் விரிவாக்கமும் அரசுப் பொருளாதாரமும்



சிங்கள தேசம் மகிழ்ந்தது போலல்லாது - உலக சமூகம் கணித்ததுபோலல்லாது - வலிகாமச் சமருக்குப் பின்னர், போர் என்றுமில்லாத அளவுக்கு விரிவாக்கம் கண்டுள்ளது. போருக்கான நிதி ஒதுக்கீட்டில் பெருந்தொகை அதிகரிப்பை சிங்கள அரசு மேற்கொண்டு விட்டது. தனது தேசிய வருமானத்தில் 22 சதவீதத்தைப் போருககுச் செலவிட அது முடிவெடுத்துவிட்டது. தனது தேசிய வருமானத்தின் மீதிருந்த பாரிய நம்பிக்கையே,' போருக்கு அதிக நிதியை ஒதுக்க அரசைத் தூண்டியது. ஆனால், தேசிய வருமானத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சில இராணுவத் தாக்குதல்களை அரசு சந்தித்துவிட்டது. அரசுப் பொருளாதாரத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக மாறும் அளவுக்கு இன்று, கொழும்புத் தாக்குதல்கள் ஒரு புதிய பரிமாணத்தையும் பெற்றுவிட்டன.

**இன்றைய நிலையில் அரசுப் பொருளாதாரமும் - தமிழ் மக்களின் உயிர்வாழ்வும் பின்னிப் பிணைந்துள்ளன. அரசுப்பொருளாதாரம் பலம் பெற்றால், அது தமிழர்களின் உயிருக்கு பேராபத்தை விளைவிக்கும். எனவே, தமிழ் மக்கள் உயிர் வாழவேண்டுமானால், அரசுப் பொருளாதாரம் ஆட்டங்காணவேண்டும்.**

இன்றைய நிலையில் அரசுப் பொருளாதாரமும் - தமிழ் மக்களின் உயிர்வாழ்வும் பின்னிப் பிணைந்துள்ளன. அரசுப்பொருளாதாரம் பலம் பெற்றால், அது தமிழர்களின் உயிருக்கு பேராபத்தை விளைவிக்கும். எனவே, தமிழ் மக்கள் உயிர் வாழவேண்டுமானால், அரசுப் பொருளாதாரம் ஆட்டங்காண வேண்டும் என்ற தவிர்க்க முடியாத நிலை உள்ளது. போர் விரிவாக்கம் என்பது, ஆயுதப் பெருக்கத்தையும் படையாட்களின் அதிகரிப்பையும் குறிக்கின்றது. ஆயுதப் பெருக்கத்திற்கும் - ஆட்பெருக்கத்திற்கும் நிதி முக்கியமானது. எனவே, அதற்குவேண்டிய நிதியை அரசு பெறமுனையும் வழிவகைகளைத் தடை செய்வது என்பதும், தமிழினம் இன அழிவிலிருந்து தற்காப்புத் தேடிக்கொள்வது என்பதும், பிரித்துப்பார்க்க முடியாத ஒரே விடயமாகின்றது. இதனால்தான் கொழும்பு மாநகரில், எல்லாளன் படை நடாத்தும் பொருளாதார மையங்கள் மீதான குண்டுத்தாக்குதல்களைத்' தமிழ் மக்களும் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றார்கள்.

இந்தப் பொருளாதாரத் தாக்குதல்கள் அரசின் பிரதான வருமானத்துறைகளான வெளிநாட்டு முதலீட்டையும் - உல்லாசப் பயணத் துறையையும் பெரிதும் பாதிக்கின்றன. இராணுவ இயந்திரத்தை நவீனப்படுத்தி தமிழினத்திற்கு எதிரான போரை விரிவாக்கம் செய்யும் அரசின் நாசகாரத் திட்டமும் இதனால் பாதிக்கப்படுகின்றது.

சிங்கள தேசத்தின் பொருளாதார மையமான கொழும்பு மாநகரம் தாக்குதல் இலக்காக மாறியுள்ளதால் - பொருளாதார நெருக்கடி என்பதைவிட வேறும் சில சிக்கல்களை அரசு எதிர்கொள்ளவேண்டி வந்துவிட்டது. வெடித்த குண்டுகள் ஏற்படுத்திய தாக்கங்கள் ஒருபுறம் இருக்க, இன்னும் வெடிக்கவைக்கப்படாத குண்டுகள் பற்றிய செய்திகளால் ஏற்பட்டுள்ள உளத் தாக்கங்களும் - அதன் பாதிப்புக்களும் கடுமையானவையாகும்.

தமிழரின் வான் பரப்பிற்குள் சிங்கள விமானப் படையின் 'சுப்பசொனிக்'குகள் நுழையும்போது தமிழ் மக்கள் அலறி விழுந்து ஓடுவதுபோல, குண்டு லொறிகள் பற்றிய வதந்திகள் சிங்கள தேசத்தின் இதயத்தை இன்று உலுக்குகின்றன. பதவிகளைப் பாதுகாப்பதற்கான சுலபமான முதலீடாகப் போரைப் பயன்படுத்தும் சிங்கள அரசியல்வாதிகளின் தந்திரோபாயத்திற்கு, கொழும்புத் தாக்குதல்கள் நெற்றியடியாக விழுகின்றன. இந்தத் தாக்குதல்கள் சிங்கள தேசத்தில் ஏற்படுத்தப்போகும் அரசியல் மற்றும் உளவியல் தாக்கங்கள், சாதாரணமானவையாக இருக்கமாட்டாது. அதன் கடுமை தன்மைபற்றி இப்போதே சில சிங்கள ஆய்வாளர்கள் எச்சரிக்கத் தொடங்கிவிட்டனர். அடுத்தடுத்த ஆண்டுகளில் போர்ச்செலவு அதிகரிப்பும் - அரசின் வருமான வீழ்ச்சியும் பயங்கரமாக மோதிக்கொள்ளப்போகின்றன. இந்தச் சிக்கலில் இருந்து, சிங்கள அரசு விடுபடவேண்டுமாயின் ஒன்றில் போரை நிறுத்தவேண்டும், அல்லது தனது தேசிய வருமானத்தை அதிகரிக்க வேண்டும். போரை நிறுத்தும் மனநிலையில் சந்திரிகா அரசு இல்லை; அதேவேளை, தேசிய வருமானத்தை அதிகரிக்கச் செய்ய எந்த மார்க்கமும் அரசுக்கு இல்லை.

கடந்த செப்ரெம்பரில் கொலன்னாவ - ஊறுகொடவத்த, அதன்பின் நூறு நாட்கள் கழித்து மத்தியவங்கி ..... இவ்வாறு சிங்கள அரசின் ,பொருளாதார இலக்குகள் தொடர்ந்து தாக்கி அழிக்கப்படுமானால்...... கிளாலிப் படகு பயணத்தைப் போல, சிங்கள அரசின் பொருளாதாரப் பயணமும் சிரமத்தையும் - ஆபத்தையுமே எதிர்கொள்ளும் என்பது நிச்சயம். ○

**தமிழரின் வான் பரப்பிற்குள் சிங்கள விமானப் படையின் 'சுப்பசொனிக்'குகள் நுழையும்போது தமிழ் மக்கள் அலறி விழுந்து ஓடுவதுபோல குண்டு லொறிகள் பற்றிய வதந்திகள் சிங்கள தேசத்தின் இதயத்தை இன்று உலுக்குகின்றன.**

## துரோகத்தின் பரிசு

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)



முறை ஆட்சியை நியாயப்படுத்தி - தமிழின அழிப்பை சர்வதேசத்தின் கண்களிலிருந்து மூடிமறைக்க, கதிர்காமரின் திறமையும் உழைப்பும் உதவிவருகின்றன என்பதே உண்மையாகும். இந்த உண்மைக் காரணத்திற்காக கதிர்காமரை அந்தச் சஞ்சிகை பாராட்டியிருக்குமானால், அது சரியானதாக இருந்திருக்கும்.

அதேவேளை, 'தமிழினத்தின் பார்வையில், 'தமிழ்த் தேசியத்திற்கு அரசியல் துரோகமிழைத்து வரும் சிறந்த தமிழன்' என்ற பட்டத்திற்கே, உண்மையில் கதிர்காமர் உரித்துடையவர்.

கதிர்காமர் அவர்கள் தனது பணியை மேலும் திறம்பட ஆற்றுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே, பேரின வாதத்தைப் பிரதிநிதித்துவபபடுத்துபவர்களால் அவர், பலவாறாகப் பாராட்டப்படுகின்றார். கதிர்காமரை மட்டுமல்ல, தமிழர் போராட்டத்திற்கு எதிராக வேலைசெய்யும் அனைத்து தமிழ்ப் புத்தி ஜீவிகளையும் - அரசியல்வாதிகளையும் சிங்களப் பேரினவாதம் புகழ்ந்துரைத்து வருவது குறிப்பிடத் தக்கது.

சர்வதேசமட்டத்தில் சிங்களப் பேரினவாதிகளால் செய்யமுடியாத போராட்ட எதிர்ப்புப் பிரச்சாரத்தை இந்த தமிழின விரோத தமிழ்ப் புத்தி ஜீவிகள் சிறப்பாகச் செய்வதற்குப் பிரதான காரணம், அவர்கள் தமிழர்கள் என்பதே ஆகும். தமிழின விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக தமிழர்களே கருத்துத் தெரிவிக்கும்போது அது சர்வதேசகவனத்திறகு உட்படுவது இயல்பே. இந்த மனிதஇயல்பை பேரினவாத ஆட்சியாளர்கள் நன்றாகப் பயன்படுத்திவருகின்றனர். இத்தகைய தமிழர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கியும்- மனித உரிமைவாதிகள் - சிறந்த மனிதர்கள் என்ற பட்டம் சூட்டிப் புகழ்ந்துரைத்தும் ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்தும் தந்திரோபாயத்தை பேரினவாதிகள் செய்கின்றனர். தமிழர்களுக்கு அரசில் பிரதிநிதித்துவமும் - அரசால் கௌரவமும் வழங்கப்படுகின்றனஎன்று உலகிற்குக் காட்டுவதோடு, அதே தமிழர்களைப் பயன்படுத்தி தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பரப்புரையையும் பேரினவாதிகள் செய்கின்றனர்.

இத்தகைய ஒருசில தமிழ்ப் புத்திஜீவிகளின் இனவிரோதச்செயற்பாடுகளால்,எமது விடுதலைப் போராட்டம் சில கருத்தியல் சிக்கல்களை - சர்வ தேசரீதியாக - சந்திக்கவேண்டிவருகின்றது. இது தமிழரின் விடுதலைப் போராட்டம் எதிர்கொள்ளும் ஒரு கசப்பான யதார்த்தமாகும். ○

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**